بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 37

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1445 - ரபீயுல் அவ்வல் 08 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - தபூக் 12 ★ 2024 செப்டம்பர் 12

## அல்லாஹ்வின் கட்டளை

یُثَبِّتُ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا بِالۡقَوۡلِ الثَّابِتِ فِی الۡحَیٰوۃِ الدُّنۡیَا وَفِی الۡاٰخِرَۃِ ۚ وَیُضِلُّ اللّٰہُ الظّٰلِمِیۡنَ ۟ۙ وَیَفۡعَلُ اللّٰہُ مَا یَشَآءُ ۝

**பொருள்**

நிலைத்து நிற்கக் கூடிய(தும் தூய்மையானதுமான) அந்த வாக்கை கொண்டு அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் உறுதியை வழங்குகிறான். மேலும் அநீதியிழைப்பவர்களை அல்லாஹ் (வழி) தவற விடுகிறான். மேலும் அல்லாஹ் தான் விரும்புவதைச் செய்கின்றான். (14: 28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மார்க்கத்திற்கு எதிரான ஏதாவது ஒரு பணியை செய்தால் அதனை தன்னால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்ற விஷயத்தை மனைவிமார்களின் உள்ளத்தில் கணவன்மார்கள் நிலைநாட்டி விட வேண்டும். மேலும் அத்துடன் அவர்களது ஒரு தவறை கண்டும் காணாமல் இருக்க முடியாத அளவிற்கு தான் ஒன்றும் கொடுங்கோலனும், அநீதியாளனும் கிடையாது என்பதையும் நிலைநாட்டி விட வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

. خَیۡرُکُمۡ خَیۡرُکُمۡ لِاَھۡلِہٖ

என்று நமது முழுமையான வழிகாட்டியான இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பொருள்: தனது குடும்பத்தினருடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்பவரே உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார். மனைவியுடன் எவர் அழகிய முறையில் நடந்து கொள்வதில்லையோ அவர் நல்லவர் கிடையாது. அவர் தனது மனைவியுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளும்போதும், சிறந்த முறையில் இல்லற வாழ்வில் ஈடுபடும்போதுதான் அவரால் மற்றவர்களுக்கு நன்மை பயக்க முடியுமே தவிர குடும்பத்தில் ஓர் அற்ப விஷயத்திற்காக அடித்து உதைப்பதால் அல்ல. எப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்கின்றன என்றால், சிலநேரம் கோபத்தால் நிறைந்த ஒரு நபர் மனைவியிடம் அற்பமான ஒரு விஷயத்தில் அதிருப்தி கொண்டு அவரை அடிக்கின்றார்; மேலும் ஒரு மெல்லியப் பகுதியில் காயம் ஏற்பட்டு அந்த மனைவி மரணித்து விடுகின்றார். எனவே அப்படிப்பட்டவர்களைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

عَاشِرُوۡھُنَّ بِالۡمَعۡرُوۡفِ

ஆயினும்! (மனைவிமார்களாகிய) அவர்கள் ஆகுமற்ற பணிகளை செய்தால் பின்னர் எச்சரிப்பது அவசியமான காரியமாகும். மார்க்கத்திற்கு எதிரான ஏதாவது ஒரு பணியை செய்தால் அதனை தன்னால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்ற விஷயத்தை மனைவிமார்களின் உள்ளத்தில் கணவன்மார்கள் நிலைநாட்டி விட வேண்டும். மேலும் அத்துடன் அவர்களது ஒரு தவறை கண்டும் காணாமல் இருக்க முடியாத அளவிற்கு தான் ஒன்றும் கொடுங்கோலனும், அநீதியாளனும் கிடையாது என்பதையும் நிலைநாட்டி விட வேண்டும்.

கணவர் என்பவர் மனைவிக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வெளிப்பாடாக இருக்கின்றார். அல்லாஹ் தன்னைத் தவிர வேறு ஒருவருக்கு ஸஜ்தா செய்யும்படி கட்டளை வழங்கியிருந்தால் பின்னர் நீங்கள் உங்களது கணவன்மார்களுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்று பெண்களுக்கு அவன் கட்டளை வழங்கியிருப்பான் என்று ஹதீஸில் வந்துள்ளது. நீ செங்கற்களின் குவியலை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் எடுத்து வை என்று கணவர் மனைவியிடம் கூறினால் பின்னர் ஆட்சேபனை செய்வதற்கு அவளுக்கு உரிமை கிடையாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 31, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

مِمَّا رَزَقۡنٰھُمۡ یُنۡفِقُوۡنَ

**என்பதில் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. அதவாது ஒரு நம்பிக்கையாளருக்கு அல்லாஹ்வின் புறமிருந்து எந்த அளவிற்கு ஆற்றல்களும், திறமைகளும் வழங்கப்பட்டுள்ளனவோ அவர் தனது ஒவ்வோர் ஆற்றலையும் மனிதகுலத்தின் நன்மைக்காக செலவிடுவது அவர் மீது கடமையாகும். நான் பணம் கொடுத்து விட்டேன் அல்லது தொழுகையை நிறைவேற்றி விட்டேன் அல்லது நோன்பு நோற்றுவிட்டேன் என்பதில் என்ற காரியத்தில் மட்டும் அவர் மகிழ்ச்சியடைந்து விடக் கூடாது**

الَّذِیۡنَ اِذَا ذُکِرَ اللّٰہُ وَجِلَتۡ قُلُوۡبُھُمۡ وَالصّٰبِرِیۡنَ عَلٰی مَاۤ اَصَابَھُمۡ وَالۡمُقِیۡمِی الصَّلٰوۃِ ۙ وَمِمَّا رَزَقۡنٰھُمۡ یُنۡفِقُوۡنَ

( அல்ஹஜ்: 36)

. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த இடத்தில் مِمَّا رَزَقۡنٰھُمۡ یُنۡفِقُوۡنَ என்பதில் வெறும் பணம் மட்டுமே அடங்காது. அதாவது மனிதன் இறைவனின் வழியில் சிறிது பணத்தை மட்டும் கொடுத்து விட்டு தான் கடமையை நிறைவேற்றி விட்டதாக கருதிக் கொள்ளக் கூடாது. மாறாக, مِمَّا رَزَقۡنٰھُمۡ یُنۡفِقُوۡنَ .என்பதில் அவரது கண்களும் அடங்கும். அவரது

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

## நபிமொழி

### அறிவார்ந்த சபைகளின் பயன்கள்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நீங்கள் சொர்க்கத்தின் தோட்டங்களை கடந்து செல்லும் போது நன்றாக மேய்ந்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சொர்க்கத்தின் தோட்டங்கள் என்பதன் பொருள் என்ன? என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு, அறிவார்ந்த சபைகள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(அத்தர்கீப் வத்தர்ஹீப் லில் முன்ஸிரி, கிதாபுல் இல்ம் பாபுத் தர்கீப் ஃபீ மஜாலிஸதில் உலமாஃ 161)

**இஸ்திஃக்ஃபார் செய்வதன் முக்கியத்துவம்**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவர் இஸ்திஃக்ஃபார் செய்வதை கட்டாயமாக்கிக் கொள்வாரோ அல்லாஹ் அவரை ஒவ்வொரு துன்பம் மற்றும் வேதனையிலிருந்து பாதுகாத்து விடுவான். மேலும் எல்லா கஷ்டங்களிலிருந்தும் வெளி வருவதற்கான வழியை உருவாக்கி விடுவான். மேலும் அவர் கற்பனை கூட செய்திருக்காத இடத்திலிருந்து அவருக்கு உணவளிப்பான். (இப்னு மாஜா, கிதாபுல் அதப், பாபுல் இஸ்திஃக்ஃபார்)

**மார்க்கப் பற்றுக் கொண்ட பெண்மணியை திருமணம் செய்வது**

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான்கு காரணங்களுக்காக பெண் திருமணம் செய்யப்படுகின்றாள். அவளது செல்வத்தின் காரணமாக, அவளது குடும்ப பரம்பரையின் காரணமாக, அவளது அழகின் காரணமாக, மேலும் அவளது மார்க்கப் பற்றின் காரணமாக.

(ஸஹீஹ் புகாரீ, கிதாபுன் நிக்காஹ்)

* * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**முரைஸீஃ போர் நிலவரங்கள் மற்றும் சம்பவங்கள்**
**மற்றும் வங்க தேசத்தில் அஹ்மதிகள் & பாலஸ்தீன முஸ்லிம்களுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை**

**மதிப்பிற்குரிய மர்ஹூம்டாக்டர் ஸகாவுர் ரஹ்மான் ஸாஹிப் ஷஹீது மற்றும் மதிப்பிற்குரிய மர்ஹூமா ஸயீதா பஷீர் ஸாஹிபா ஆகியோரின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் வரை எட்டியுள்ள அந்தச் செய்தியின் காரணமாக தாங்கள் என் தந்தையைக் கொன்றுவிட எண்ணியிருக்கிறீர்கள் என்றால், (அதற்கு) எனக்குக் கட்டளையிடுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் இந்த சபையில் இருந்து எழுந்திருப்பதற்கு முன்னர் நான் அவர் தலையைக் கொண்டு வருவேன் என்று நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபையின் மகனும், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஸஹாபியுமான அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்

அப்துல்லாஹ்வே! நான் அவரைக் கொல்லவும் எண்ணவில்லை. எவருக்கும் அதற்கான கட்டளையும் இடவில்லை. அவர் நம்மிடையே இருக்கும் வரை நாம் நிச்சயம் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வோம் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 ஆகஸ்ட் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுஹுர்** மாதம் **09 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஜல்ஸாவுக்கு முந்தைய குத்பாக்களில் முரைஸீஃ போர் பற்றி கூறப்பட்டு வந்தது. அப்துல்லாஹ் பின் உபை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறித்து தவறான விஷயங்களைப் பேசினான்; நயவஞ்சகமாக நடந்து கொண்டான் என்பதும் கூறப்பட்டிருந்தது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் நூலில் இந்த சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

போர் நிறைவடைந்த பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சில நாட்கள் முரைஸீஃயில் தங்கியிருந்தார்கள். ஆனால், அங்கு தங்கியிருந்த போது நயவஞ்சகர்கள் தரப்பிலிருந்து எத்தகைய விரும்பத்தகாத நிகழ்வு நடந்தது என்றால் அதனால் பலவீனமான முஸ்லிம்களுக்கிடையில் உட்பூசலே வந்திருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சந்தர்ப்பம் அறிந்து செயல்படும் திறனும், காந்த ஆற்றலும் இந்தக் குழப்பத்தின் பயங்கரமான விளைவுகளிலிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்றி விட்டன.

என்ன நிகழ்ந்தது என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு பணியாளர் ஜஹ்ஜாஹ் என்பவர் முரைஸீஃ எனும் இடத்தில் நீரூற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றார். தற்செயலாக அதே நேரத்தில் அன்ஸாரிகளின் கிளைக் கோத்திரத்தைச் சேர்ந்த ஸினான் என்பவரும் தண்ணீர் எடுக்க அங்கு வந்து சேர்ந்தார். இந்த இருவரும் பாமரர்களாக, அறிவீனர்களாக இருக்கும் மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். நீரூற்றில் இவர்கள் இருவரும் ஒருவர் மற்றவருடன் சண்டையிடத் துவங்கினார்கள்.

ஜஹ்ஜாஹ் ஸினானை அடித்து விட்டார். பிறகென்ன? அன்ஸாரிகளின் கூட்டமே!, எனக்கு உதவ வாருங்கள்; என்னை அடித்து விட்டார்கள் என்று ஸினான் உரத்த குரலில் கத்தினார். ஸினான் தனது சமுதாயத்தை அழைத்ததை ஜஹ்ஜாஹ் கண்டதும் முஹாஜிர்களே! ஓடி வாருங்கள்! என்று அவரும் தனது சமுதாயத்து மக்களை அழைக்கத் துவங்கி விட்டார்.

அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்களில் எவர்களின் காதுகளை இந்த ஓசை சென்றடைந்ததோ அவர்கள் வாள்களை எடுத்துக் கொண்டு ஆவேசமாக அந்த நீரூற்றின் பக்கம் விரைந்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அங்கு ஒரு பெரும் கூட்டம் கூடி விட்டது. சில அறிவீனமான இளைஞர்கள் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்தே இருப்பார்கள். ஆனால், அதற்குள் சில களங்கமற்ற அன்ஸாரிகளும், முஹாஜிர்களும் சம்பவ இடத்தை வந்தடைந்தார்கள். அவர்கள் உடனடியாக மக்களைப் பிரித்து விட்டு சமரசம் செய்து வைத்து விட்டார்கள்.

இந்தத் தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எட்டிய போது, இது ஓர் அறிவீனத்தின் வெளிப்பாடு ஆகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும் அதில் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். எவ்வாறாயினும், இவ்வாறு பிரச்சனை முடிவுக்கு வந்தது. ஆனால், அந்தப் போரில் கலந்து கொண்டிருந்த, நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸுலூலுக்கு இந்த நிகழ்வு பற்றிய தகவல் கிடைத்தபோது, அந்தப் பேறிழுந்தவன் அந்தக் குழப்பத்தை மீண்டும் எழுப்ப நினைத்தான். தன்னுடைய கூட்டாளிகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக மிகவும் தூண்டி விட்டான்.

மேலும், இதெல்லாம் உங்களுடைய சொந்தத் தவறுகள் ; நீங்கள் அந்த வீடுகளற்ற முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களைத் தலையில் ஏற்றி வைத்து விட்டீர்கள். இப்பொழுது உங்களுக்கு உதவுவதிலிருந்து விட்டு விட்டு அவர்கள் சென்று விடுவார்கள் என்று கூறினான். கடைசியில் அந்தப் பேறிழுந்தவன் இந்த அளவுக்கு கூறிவிட்டான்:

لَئِنْ رَجَعْنَا إِلَى الْمَدِيْنَةِ
لَيُخْرِجَنَّ الْأَعَزُّ مِنْهَا الْأَذَلَّ

அதாவது, இப்பொழுது மதீனாவுக்குச் சென்று, கண்ணியத்திற்குரிய நபர் அல்லது குழு இழிவான நபர் அல்லது குழுவைத் தனது ஊரிலிருந்து வெளியேறுகிறதா? இல்லையா? என்று பார்க்கத் தான் செய்யுங்களேன். அப்பொழுது ஒரு களங்கமற்ற முஸ்லிம் சிறுவர் ஹஸ்ரத் ஸைது பின் அக்ரம் (ரலி) அவர்களும் அங்கு அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அப்துல்லாஹ்வின் நாவிலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி இந்தச் சொற்களைக் கேட்டபோது அமைதியழந்து போனார்கள். அவர்கள் உடனடியாக தம் சிறிய தந்தையார் மூலமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த நிகழ்வைப் பற்றி தகவல் கொடுத்தார்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு இந்த சொற்களைக் கேட்டு மிகுந்த கோபமும்,தன்மான உணர்வும் ஏற்பட்டது. மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அந்த நயவஞ்சகக் குழப்பவாதியின் தலையை சீவ தாங்கள் எனக்கு அனுமதி தாருங்கள் என்று அவர்கள்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உமரே! போகட்டும் விட்டு விடும்!. மக்கள் மத்தியில் முஹம்மத் (ஸல்) தன் உடனிருப்பவர்களைக் கொல்ல வைத்துக் கொண்டிருக்கிறார் என்று பேசப்படுவதை நீர் விரும்புகிறீரா? என்று கூறினார்கள். பிறகு அன்னார் அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவனுடைய கூட்டாளிகளை வரவழைத்தார்கள். இது என்ன விவகாரம்? என்று அவர்களிடம் வினவினார்கள்.

அவர்கள் எல்லாரும் நாங்கள் இப்படி எதுவும் பேசவில்லை என்று சத்தியம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சில அன்ஸாரிகளும் பரிந்துரை செய்யும் விதமாக, ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்களுக்குத் தவறு ஏற்பட்டிருக்கும் என்று பணிவுடன் கூறினார்கள். அப்பொழுது ஹுஸுர் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவனுடைய கூட்டாளிகளின் கூற்றை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களின் பேச்சை நிராகரித்து விட்டார்கள். அதனால் ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களுக்கு பெருந்துயர் ஏற்பட்டது. ஆனால், பின்னர் திருக்குர்ஆனில் வஹீ ஸைத் (ரலி) அவர்களை உண்மைப்படுத்தியது. நயவஞ்சகர்களைப் பொய்யர்கள் எனக் கூறிவிட்டது.

ஒருபுறம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உபை போன்றோரை வரவழைத்து இந்த விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் துவங்கி விட்டார்கள். மறுபுறம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், இப்பொழுதே மக்களுக்குப் புறப்பட்டுச் செல்லக் கட்டளையிடுங்கள் என்று வழிகாட்டினார்கள். இந்த நேரம் மதிய நேரமாக இருந்தது.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொதுவாக புறப்பட மாட்டார்கள். ஏனெனில், அரேபியாவின் பருவ நிலையைப் பொறுத்தவரை இந்த நேரம் பெரும் வெப்பம் நிறைந்த நேரமாக இருந்தது. இதில் பயணம் செய்வது மிகவும் வேதனை அளிக்கக் கூடியதாக அமையும். ஆனால், அன்னார் அப்போதைய நிலைமைக்கு ஏற்ப இப்பொழுது புறப்பட்டு விட வேண்டும் என்பதையே பொருத்தமானதாகக் கருதினார்கள். எனவே ஹுஸுர் (ஸல்) அவர்களின் கட்டளையின் கீழ் உடனடியாக முழு இஸ்லாமிய படையும் திரும்பிச் செல்ல ஆயத்தம் மேற்கொள்ளத் துவங்கி விட்டது.

அநேகமாக இந்த சந்தர்ப்பத்தில்தான்- அவ்ஸ் கோத்திரத்தின் மிகவும் பிரபலமான தலைவர் ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் (ரலி) அன்னாரிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் பொதுவாக இத்தகைய நேரத்தில் பயணம் மேற்கொள்ள மாட்டீர்களே இன்று என்ன விவகாரம்? என்று பணிவுடன் கேட்டார்கள்.

அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், உஸைதே! அப்துல்லாஹ் பின் உபை என்ன சொற்களைக் கூறினான் என்று நீர் கேள்விப்படவில்லையா? அவன், நாம் மதீனாவுக்கு செல்லலாம்; அங்கு சென்று கண்ணியத்திற்குரிய நபர் இழிவான நபரை வெளியேற்றி விடுவார் எனக் கூறினான் என்று கூறினார்கள்.

உஸைத் (ரலி) அவர்கள் தாமதிக்காமல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் விரும்பினால் அப்துல்லாஹ்வை தாராளமாக மதீனாவிலிருந்து வெளியேற்றலாம். ஏனெனில், அல்லாஹ்வின் மீது ஆணையாக! கண்ணியத்திற்குரியவர் தாங்களே ஆவீர்கள். அவனே இழிவானவன் ஆவான் என்று பணிவுடன் கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அறிவீர்கள்; தாங்கள் வருகை தருவதற்கு முன்பு அப்துல்லாஹ் பின் உபை தனது சமுதாயத்தில் மிகவும் கண்ணியத்திற்குரியவனாக இருந்தான். அவனது சமுதாயம் அவனைத் தனது அரசனாக்கும் கருத்தில் இருந்தது. அது ஹுஸுர் (ஸல்) அவர்கள் வருகை தந்ததினால் மண்ணோடு மண்ணானது. எனவே இதன் காரணமாக அவனது உள்ளத்தில் தங்களைக் குறித்த பொறாமை குடிகொண்டு விட்டது. எனவே அவனுடைய வெற்றுப் பேச்சுகளை சற்றும் பொருட்படுத்தாதீர்கள். அவனை மன்னித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அப்துல்லாஹ் பின் உபையின் மகனுக்கு இந்த விஷயங்கள் அனைத்தும் தெரிய வந்ததும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உரையாடல் பற்றி தெரிய வந்ததும், அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்து பணிவுடன் இவ்வாறு கேட்டுக் கொண்டார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் வரை எட்டியுள்ள அந்தச் செய்தியின் காரணமாக தாங்கள் என் தந்தையைக் கொன்றுவிட எண்ணியிருக்கிறீர்கள் என்றால், (அதற்கு) எனக்குக் கட்டளையிடுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் இந்த சபையில் இருந்து எழுந்திருப்பதற்கு முன்னர் நான் அவர் தலையைக் கொண்டு வருவேன்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! கஸ்ரஜ் கோத்திரத்தில் என்னை விடப் பெற்றோருடன் நல்லமுறையில் நடந்து கொள்பவர் எந்த மனிதரும் இல்லை என்பதை கஸ்ரஜ் மக்கள் அறிவார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் என்னை அன்றி வேறு எவருக்காவது அவரைக் கொல்வதற்கான கட்டளையிட்டு, பிறகு என் தந்தையைக் கொன்றவர் மக்கள் மத்தியில் நடமாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதை எனது உள்ளம் விடாதோ என்றும், நான் அவரைக் கொன்று நெருப்பில் நுழைந்து விடுவேனோ என்றும் அஞ்சுகிறேன்.

வேறு யாராவது கொன்றால், நான் கோபத்தில் அவரைக் கொன்று விடப் போகிறேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்து விடுவது எல்லாவற்றையும் விடச் சிறந்ததும் மேலும் அவர் மீது பெரும் கருணை காட்டுவது எல்லாவற்றையும் விட மகத்தானதும் ஆகும்.

அவர் கூறிய விஷயங்களைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ்வே! நான் அவரைக் கொல்லவும் எண்ணவில்லை. எவருக்கும் அதற்கான கட்டளையும் இடவில்லை. அவர் நம்மிடையே இருக்கும் வரை நாம் நிச்சயம் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வோம்.

அதற்கு அப்துல்லாஹ், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஐயமின்றி என் தந்தையின் தலையில் மகுடம் வைப்பதற்கு இந்த நகர மக்கள் நிச்சயமாக ஒருமித்து விட்டிருந்தார்கள். பிறகு எல்லாம் வல்ல அல்லாஹ் தங்களைக் கொண்டு வந்தான். அல்லாஹ் அவனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டான். தங்கள் மூலமாக எங்களை உயர்த்தி விட்டான் - இதை அப்துல்லாஹ் பின் உபை மகன் கூறுகிறார் - அவரிம் வந்து செல்லக் கூடிய சில மக்கள் அவருடன் இருக்கிறார்கள். எந்த விஷயங்கள் மீது அல்லாஹ் மேலோங்கி விட்டானோ அந்த விஷயங்களை அவருக்கு நினைவூட்டுகிறார்கள் என்று பணிவுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: அப்துல்லாஹ் பின் உபையுடைய மகன் பெயர் ஹுபாப் ஆகும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை மாற்றி அப்துல்லாஹ் என்று ஆக்கிவிட்டிருந்தார்கள். எவ்வாறாயினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி, திரும்பிச் செல்லும் பயணம் துவங்கியது. அதன் விவரத்தில் மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்றைய தினம் மாலை வரையும், முழு இரவும் காலை வரையும், பகலின் ஆரம்பப் பகுதியிலும் பயணம் செய்தார்கள். சூரியன் மக்களுக்கு வேதனை அளிக்கத் துவங்கியது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களுடன் தங்கினார்கள். அப்பொழுது அவர்கள் நிலத்தில் இறங்கியதுமே உறங்கி விட்டார்கள்.

அந்த முழு பயணத்திலும் ஒருவர் கூட இயற்கை தேவைக்காக, தொழுகைக்காக அன்றி வேறும் எதற்காகவும் தனது பயண விலங்கில் இருந்து இறங்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது பயண விலங்கை ஓட்டுவார்கள். அதன் பின்னங்கால்களில் சாட்டையால் அடிப்பார்கள். கடந்த நாள் நிகழ்ந்த அப்துல்லாஹ் பின் உபையின் விஷயம் மக்களுக்கு மறந்து போவதற்காக இந்தப் பெரிய பயணத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்றைய தினம் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் அக்ரம் (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு பக்கத்தில் தமது பயண விலங்கில் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது பயண விலங்கின் சேணத்தைக் காலால் இழுப்பார்கள். அது சற்று வேகமாகி விடும். அப்பொழுது அன்னார் (ஸல்) மீது வஹீ இறங்கத் துவங்கியது.

ஹஸ்ரத் ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கண்டேன். அன்னார் (ஸல்) மீது இரக்கம் ஏற்பட்டது. அன்னாரது நெற்றி வியர்வையால் நனைந்துப் போனது. அன்னாரது பயண விலங்கின் முன்னங்கால்கள் பாரமாகிவிட்டன. எதுவரை எனில், அது அவற்றை மடக்கியிருக்கும்.



அதாவது, அதன் கால்கள் மடங்கிப் போயிருக்கும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி வஹீ அறிவிக்கப்படுகிறது என்று நான் அறிந்து கொண்டேன். ஏனெனில், அன்னார் (ஸல்) மீது வஹீ இறக்கப்படும் போதுதான் அன்னாருக்கு இந்த நிலை ஏற்படும். வஹீயில் எனது தகவலை உண்மைப்படுத்துதலும் இறங்கியிருக்கும் என்ற எனக்கு நம்பிக்கை இருந்தது.

ஹஸ்ரத் ஸைது பின் அக்ரம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தத் தன்மை முடிவுக்கு வந்தது. அப்பொழுது அன்னார் (ஸல்) எனது காதைப் பிடித்தார்கள். நான் எனது பயண விலங்கில் இருந்தேன். எதுவரை என்றால் நான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து விட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறலானார்கள்: பாலகனே! உமது காது நன்றியுணர்வுடன் நடந்து கொண்டுள்ளது. அல்லாஹ் உமது கூற்றை உண்மைப்படுத்தி விட்டான். அதாவது வஹீ அதைப் பற்றித்தான் இருந்தது.

மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் ஸைது பின் அக்ரம் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பயணத்தில் சென்று கொண்டிருந்தேன். நான் துயரத்தால் எனது தலையைத் தாழ்த்தியிருந்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். எனது காதைத் தடவினார்கள். என் முன் புன்சிரித்து விட்டார்கள். அன்னாரது இந்தப் புன்சிரிப்புக்கு பகரமா எனக்கு நிரந்தர வாழ்வு கிடைத்துவிட்டாலும் அது எனக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருந்திருக்காது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்தப் புன்சிரிப்பைப் பார்த்து எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றால் எனக்கு எனது வாழ்க்கையை விட இந்தப் புன்சிரிப்பு விலையுயர்ந்ததாகத் தெரிந்தது. அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை சந்தித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உன்னிடம் என்ன கூறினார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் அன்னார் (ஸல்) என்னிடம் எதுவும் கூறவில்லை எனது காதைத் தடவி எனக்கு முன் புன்சிரிக்க மட்டுமே செய்தார்கள் என்று கூறினேன். அதற்கு நற்செய்தி என்று அவர்கள் கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னை சந்தித்தார்கள். நான் அவர்களிடமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறிய விஷயத்தையே கூறினேன்.

ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. சூரா அல் முனாஃபிக்கூன் இறங்கிய போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைதை வரவழைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த வசனங்களை ஓதினார்கள்.

மேலும், إِنَّ اللّٰهَ قَدْ صَدَّقَكَ

என்று கூறினார்கள். அதாவது, அல்லாஹ் உம்மை உண்மைப்படுத்தி விட்டான். ஆக, சூரா முனாஃபிக்கூன் இறங்கிய பிறகு ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) இப்னு உபையைக் கடந்து சென்றார்கள். அப்பொழுது அவர்கள் அவனுக்கு ஸலாம் கூட கூறவில்லை. பிறகு அவ்ஸ் பின் ஃஹவ்லீ (ரலி) அவர்கள் கடந்து சென்றார்கள். அவர்களும் ஸலாம் கூறவில்லை. இதைப் பார்த்த இப்னு உபை இதென்ன விவகாரம். இதில் நீங்கள் இருவரும் இணைந்து விட்டீர்களே! என்று கேட்டான்.

அவனது இந்தக் கூற்றை அவர்கள் கேட்டு விட்டார்கள். அந்த இரு ஸஹாபிகளும் அவனிடம் வந்தார்கள். அவனது இந்த செயலுக்கு அவனை மிகவும் ஏசி பேசினார்கள். அவன் பேச்சைப் பொய்ப்படுத்த திருக்குர்ஆன் வஹீ இறங்கி விட்டது என்று கூறினார்கள். அவ்ஸ் பின் ஃஹவ்லீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீ! உனது செய்கைகளை விட்டுத் திருந்தி விட்டாய் என்பதும், நீ! அல்லாஹ்விடம் தவ்பா செய்து விட்டாய் என்பதும் எனக்குத் தெரியாத வரை நான் உன்னைப் பற்றி ஒருபோதும் எதுவும் பேச மாட்டேன்; நாங்கள் உனக்காக ஸைது பின் அர்கமிடம், நீர் உமது சமுதாயத்தின் ஒரு மனிதரைப் பற்றி தவறாகப் பேசியுள்ளீரே! என்று திட்டிக் கொண்டு இருந்தோம். எதுவரை என்றால், ஸைது உண்மைப்படுத்தப்பட்டு விட்டார். உனது பொய் மீது திருக்குர்ஆன் வசனத்தின் முத்திரை இடப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்குப் புறப்படுமாறு கட்டளையிட்டபோது, அப்துல்லாஹ் பின் உபை மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் மக்களுக்கு முன்னால் வந்து வழியில் வந்து தம் தந்தைக்காக நின்றுவிட்டார்கள். தந்தையைக் கண்டதும் அவனைத் தடுத்து, நீ மிகவும் இழிவானவன் என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட கண்ணியத்திற்குரியவர் என்றும் நீ ஒப்புக் கொள்ளாத வரை நான் உன்னை விட மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களைக் கடந்து சென்றார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்) அவரை விட்டு விடுங்கள்; எனது வாழ்நாள் மீது ஆணையாக! அவர் நம் மத்தியில் இருக்கும் வரை நாம் அவருடன் நிச்சயமாக நன்றாக நடந்து கொள்வோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அப்துல்லாஹ் பின் உபையின் மகன் அப்துல்லாஹ் அவர்களுக்குத் தம் தந்தைக்கு எதிராக எவ்வளவு உத்வேகம் இருந்தது? என்றால், இஸ்லாமியப் படை மதீனாவின் பக்கம் திரும்பிய போது, அப்துல்லாஹ் தம் தந்தையின் வழியை மறித்துக் கொண்டு நின்று விட்டார்கள். மேலும், இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரியவர்கள் என்றும், நீ இழிவானவன் என்றும் நீ உனது வாயால் ஒப்புதல் கொள்ளாத வரை நான் உன்னைத் திரும்பிச் செல்ல விட மாட்டேன் என்று கூறினார்கள். அப்துல்லாஹ் எவ்வளவு வற்புறுத்தி தம் தந்தைக்கு அழுத்தம் கொடுத்தார்கள் என்றால் இறுதியில் அவன் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இந்தச் சொற்களைக் கூறிவிட்டான். இதனால் அப்துல்லாஹ் அவர்கள் அவனுக்கு வழிவிட்டு விட்டார்கள்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

திரும்பிச் செல்லும் பயணம் துவங்கியபோது, அந்த நாளின் எஞ்சியிருந்தப் பகுதி முழு இரவு மற்றும் அடுத்த நாளின் ஆரம்ப பகுதி இஸ்லாமிய படை நிற்காமல் தொடர்ச்சியாக சென்று கொண்டே இருந்தது. கடைசியில் முகாமிட்ட போது, மக்கள் எந்த அளவு களைத்து போயிருந்தார்கள் என்றால் தங்க ஆரம்பித்த உடனேயே அவர்களில் பெரும்பாலார் ஆழ்ந்து உறங்கி விட்டார்கள். இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் விழிப்புணர்வால் மக்களின் கவனம் அந்த விரும்பத்தகாத சம்பவத்தை விட்டு அகன்று ஒரு நீண்ட நேரம் வரை மறுபக்கம் இணைந்திருந்தது.

அல்லாஹ் தனதருளால் முஸ்லிம்களை முனாஃபிக்குகளின் குழப்பம் விளைவித்தலிருந்து காப்பாற்றி விட்டான். உண்மையில், மதீனாவின் நயவஞ்சகர்கள் எப்படியாவது முஸ்லிம்கள் மத்தியில் உட்பூசலை, ஒருவர் மற்றவருடனான பிரிவினை சூழலை உருவாக்கி விட வேண்டும் என்றும், முடிந்தால் அவர்களது பார்வையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைக் குறைத்து விட வேண்டும் என்றும் எப்பொழுதும் முயற்சித்து வந்தனர். ஆனால், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் காந்தத் தன்மையானது முஸ்லிம்களிடம் எத்தகைய ஒற்றுமை உறவை உருவாக்கி விட்டிருந்தது எனில், எந்த சதியும் அதில் குழப்பம் ஏற்படுத்த முடியாமல் இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றியோ முஸ்லிம்களின் உள்ளத்தில் கண்ணியம், மரியாதை, களங்கமற்றத் தன்மை, ஈமான் மற்றும் அன்பு, நேசம் ஆகியவற்றின் எத்தகைய உணர்வுகள் பதிந்து விட்டிருந்தன என்றால், அவற்றை ஆட்டங்காண வைப்பதற்கு எந்தவொரு மனிதனுக்கும் ஆற்றல் இருக்கவில்லை.

ஆக, இந்தச் சந்தர்ப்பத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன்! முனாஃபிக்குகளின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை இரு பாமர முஸ்லிம்களின் ஒரு தற்காலிக சண்டையிலிருந்து பயனடைந்தவாறு எவ்வாறு ஸஹாபிகள் மத்தியில் வேறுபாடு மற்றும் பிரிவினைக்கான விதையை விதைப்பதற்கும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான அன்பு மற்றும் மதிப்பச்சத்துக்குத் துயரத்தை எட்ட வைப்பதற்கும் முயற்சி செய்துள்ளான்! ஆனால், அவனுக்கு எப்படிப்பட்ட தோல்வி முகத்தை காண நேரிட்டது. இறைவன் அவனை அவன் மகன் கைகளாலேயே எப்படிப்பட்ட இழிவின் பானத்தை அருந்தச் செய்துள்ளான் என்றால், அது அவனுக்கு அநேகமாக மரணிக்கும் நேரம் வரை மறந்திருக்காது.

இந்த நிகழ்வுக்குப் பிறகுள்ளதாக மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; அப்துல்லாஹ் பின் உபை எப்பொழுது இப்படி எதுவும் பேசினாலும் அவனது சமுதாயத்தினர் அவனைப் பழித்துரைப்பார்கள். அவனை நிறுத்துவார்கள் ; தடுப்பார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சூழ்நிலையைப் பற்றி தெய வந்தபோது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உமரே! இப்போது கூறும்; அல்லாஹ்வின் மீது ஆணையாக!

ஒருவேளை நீர் என்னிடம் கூறியபோது, அன்று நான் அவனை கொல்ல வைத்திருந்தால் மக்கள் என் மீது தப்பெண்ணம் கொண்டிருப்பார்கள். அதிருப்தியை வெளிப்படுத்தியிருப்பார்கள். இப்பொழுது அந்த மக்களுக்கே நான் அவனைக் கொல்லுமாறு கட்டளையிட்டால், அவர்கள் நிச்சயம் அவனைக் கொன்று விடுவார்கள். ஏனெனில், இப்பொழுது நிலைமை தெளிவாகி விட்டது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருத்து எனது கருத்தை விட அதிகம் அருளுக்குரியது என்பதை நான் அறிந்து கொண்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பனூ முஸ்தலிக் போர் மற்றும் அப்துல்லாஹ் பின் உபையின் இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதில் குறியாக இருந்தார்கள். நண்பர்களாக இருந்த கோத்திரங்களும் எதிரிகளாகிக் கொண்டிருந்தன. எனவே முஸ்லிம்கள் மத்தியில் இருந்த அந்த நயவஞ்சகர்களும் இந்த சந்தர்ப்பத்தில், அவர்கள் முஸ்லிம்கள் தரப்பில் ஆகி போரில் கலந்து கொள்ளத் துணிந்தார்கள். அநேகமாக இவ்வாறு அவர்களுக்கு முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்க முடியும் என்று எண்ணினார்கள். ஆனால், பனூ முஸ்தலிக்குடன் நடந்த போர் சில மணி நேரங்களில் முடிந்து விட்டது.

எனவே இந்தப் போரின் போது, நயவஞ்சகர்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்க முடியாமல் போனது. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிகின் ஊரில் சிலநாட்கள் தங்கத் தீர்மானித்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு தங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு மக்காவாழ் முஸ்லிமுக்கு ஒரு மதீனாவாழ் முஸ்லிமுடன் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது சம்பந்தமாக சண்டை வந்து விட்டது. தற்செயலாக இந்த மக்காவாழ் நபர் விடுதலை செய்யப்பட்ட ஓர் அடிமையாக இருந்தார். அவர் மதீனத்து நபரை அடித்தார். இதனால் அவர் அன்ஸாரிகள் என அழைக்கப்பட்டு வந்த மதீனத்து மக்களை அழைத்தார். மக்கத்து நபர் முஹாஜிர்களை அழைத்தார். இவ்வாறு உத்வேகம் பரவிவிட்டது. அசல் விஷயம் என்ன? என்று எவரும் கேட்க முயற்சி செய்யவில்லை.

உத்வேகம் ஏற்பட்டது. சண்டையிட ஆரம்பித்து விட்டார்கள். இவ்வாறே குழப்பங்கள் உருவாகின.

இருபுறத்து இளைஞர்களும் வாள்களை வெளியே எடுத்து விட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தை இறைவன் ஏற்படுத்திக் கொடுத்து விட்டதாக அப்துல்லாஹ் பின் உபை கருதினான். அல்லாஹ் அவனுக்கு இந்த சந்தர்ப்பத்தை வழங்கியதாக நினைத்தான். அவன் எரியும் நெருப்பில் எண்ணை ஊற்ற நினைத்தான். அவன் மதீனாவாழ் மக்களைப் பார்த்து, இந்த முஹாஜிர்கள் மீது உங்களது கருணை எல்லையைக் கடந்து விட்டது. நீங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டதனால் இவர்களின் மூளை குழம்பி விட்டது. இவர்கள் நாளுக்கு நாள் உங்கள் தலை மீது ஏறிக் கொண்டே இருக்கின்றார்கள் என்று கூறினான்.

அப்துல்லாஹ் நினைத்த அதே தாக்கம் இந்த உரைக்கு ஏற்பட்டு, சண்டை கடுமையாகியிருக்கும். ஆனால், அப்படி நடக்கவில்லை. அப்துல்லாஹ் தனது தீங்கு விளைவிக்கும் உரையைப் பற்றி கணிப்பதில் தவறிழைத்திருந்தான். அன்ஸாரிகள் மீது அதன் தாக்கம் ஏற்பட்டு விட்டது என்று கருதி அவன் நாம் திரும்பிச் சென்று மதீனாவை அடையட்டும்; பிறகு கண்ணியத்திற்குரிய நபர் இழிவான நபரை வெளியேற்றி விடுவார் என்ற அளவுக்குக் கூறிவிட்டான்.

எல்லாரையும் விட கண்ணியத்திற்குரிய நபர் என்று அவன் தன்னை நினைத்தும், எல்லாரையும் விட இழிவானவர் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைத்தும் அவன் கூறினான். நவூதுபில்லாஹ் மின் ஸாலிக். (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.)

எவ்வாறு இருப்பினும், இந்த விஷயம் அவன் வாயிலிருந்து வந்ததுமே நம்பிக்கை கொண்டவர்கள் மீது அவனது உண்மை வெளிப்பட்டு விட்டது. இது சாதாரண விஷயம் அல்ல; மாறாக, இது ஷைத்தானின் கூற்றாகும். அவன் நம்மை வழிகெடுக்க வந்துள்ளான் என்று அவர்கள் கூறினார்கள்.

ஓர் இளைஞர் எழுந்தார். அவர் தன் சிறிய தந்தை மூலமாக இந்த செய்தியை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எட்ட வைத்தார். அன்னார் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் மற்றும் அவனுடைய கூட்டாளிகளை வரவழைத்தார்கள். என்ன விஷயம் நடந்தது? என்று வினவினார்கள். அப்துல்லாஹ் மற்றும் அவனுடைய கூட்டாளிகள் முற்றிலும் மறுத்து விட்டார்கள். எங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த சம்பவம் நடக்கவே இல்லை என்று கூறிவிட்டார்கள்.

முற்றிலும் இல்லை என்று சாதித்து விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்களை எதுவும் இல்லை. ஆனால், உண்மையான விஷயம் பரவ ஆரம்பித்து விட்டது. சில காலங்களுக்குப் பிறகு அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் மகன் அப்துல்லாஹ்வும் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டார்கள்.

அவர்கள் உடனடியாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அவைக்குச் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தந்தை தங்களை அவமதித்துள்ளார். அதற்கான தண்டனை மரணம் ஆகும். தாங்கள் இதே முடிவை எடுத்தீர்களாயின் என் தந்தையைக் கொல்வதற்குத் தாங்கள் எனக்கு கட்டளையிட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்; தாங்கள் வேறு யாருக்காவது கட்டளையிட்டு, என் தந்தை அவர்கள் கையால் கொல்லப்பட்டால் ஒருவேளை நான் அந்த மனிதரைக் கொன்று என் தந்தைக்காகப் பழிவாங்கிவிடக் கூடும். இவ்வாறு அல்லாஹ்வின் கோபத்தை சம்பாதித்திட வாய்ப்பு உள்ளது என்று கூறினார்கள்.

ஏனெனில், எவ்வாறு இருப்பினும் ஓரளவு கோபத்தின் தாக்கம் அவர்களின் இயல்புகளில் இருந்தது. எனக்குக் கட்டளையிடுங்கள்; நான் என் தந்தையைக் கொன்று விடுகிறேன் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், எனக்கு ஒருபோதும் அதற்கான எண்ணமில்லை; நான் உம் தந்தையுடன் மென்மையுடனும், கருணையுடனும் நடந்து கொள்வேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்துல்லாஹ் அவர்கள் தன் தந்தையின் நன்றிகேடு மற்றும் தீய பேச்சை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மென்மை மற்றும் கருணையுடன் ஒப்பிட்டு பார்த்தபோது, அவர்களது ஈமான் இன்னும் அதிகரித்து விட்டது. தன் தந்தை மீதான அவர்களது கோபமும் அதே அளவு கூடிக் கொண்டே சென்றது. படை மதீனாவுக்கு அருகில் சென்றடைந்தபோது, அவர்கள் முன்னால் சென்று தன் தந்தையை வழிமறித்தார்கள்.

அவனிடம், நீ! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக பயன்படுத்திய அந்தச் சொற்களை திரும்பப் பெறாத வரை நான் உன்னை மதீனாவுக்குள் நுழைய விடமாட்டேன் என்று கூறினார்கள். எந்த வாயில் இருந்து அல்லாஹ்வின் நபி இழிவானவர் என்றும், நீ! கண்ணியத்திற்குரியவன் என்றும் சொல் வந்ததோ, அதே வாயால் அல்லாஹ்வின் நபி கண்ணியத்திற்குரியவர் ஆவார்கள் என்றும், நீ! இழிவானவன் என்றும் நீ! கூற வேண்டும். நீ! இதைக் கூறாத வரை நான் உன்னை ஒருபோதும் முன்னால் செல்லவிட மாட்டேன் என்று கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் வியந்தும், பயந்தும் போனான். மகனே! நான் உன்னுடன் கருத்தொருமிக்கிறேன். முஹம்மது (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரியவர் ஆவார்கள். நான் இழிவானவன் ஆவேன் என்று அவன் கூற ஆரம்பித்து விட்டான். இளைஞர் அப்துல்லாஹ் இதனால் தன் தந்தையை விட்டு விட்டார்கள்.

இந்தப் பயணத்தின்போது இந்தவோர் நிகழ்வும் ஏற்பட்டது. அதாவது, ஓரிடத்தில் எங்கு முகாமிருந்ததோ அங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒட்டகம் தொலைந்து விட்டது. அதன் விவரம் பின்வருமாறு: பனூ முஸ்தலிக்கில் இருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃபுவைக்குன் நகீ அல்லது பகா எனும் ஒரு நீரூற்றுக்கு அருகில் இறங்கினார்கள். பகா என்பது நகீ பகுதிக்கு மேற்பகுதியில் உள்ளது. நகீ மதீனாவில் இருந்து தெற்கில் 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

எவ்வாறாயினும், முஸ்லிம்கள் இவ்விடத்தில் தங்களுடைய விலங்குகளை மேய விட்டு விட்டார்கள். அப்பொழுது கடுமையான சூறாவளி வந்து விட்டது. அந்தப் புயலின் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கஸ்வா எனும் ஒட்டகம் ஒன்று தொலைந்து விட்டது. முஸ்லிம்கள் அதை எல்லாத் திசைகளிலும் தேட துவங்கினார்கள். ஸைது பின் நுஸைத் அன்ஸாரியும் ஒரு கூட்டத்தில் இருந்தார். இவர் நயவஞ்சகராக இருந்தார். அந்தக் கூட்டத்தில் ஹஸ்ரத் உபாத் பின் பஷர் பின் வக்ஷ், சலமா பின் சுலாமா மற்றும் உஸைது பின் ஹுஸைர் ஆகியோரும் அமர்ந்திருந்தார்கள்.

ஸைது பின் நுஸைத் யூதர்களின் கோத்திரமான பனூ கைனுக்காவைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் வெளிப்படையில் முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார். ஆனால், உள்ளுக்குள் யூதர்களாகவே இருந்த அந்த யூத அறிஞர்களில் ஒருவராகக் காணப்பட்டார். அந்த முனாஃபிக் அதாவது ஸைது பின் நுஸைத் மக்கள் ஏன் ஓடிக் கொண்டிருக்கின்றனர்? என்று கேட்டார்.

இவர்கள் எல்லாம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தை தேடிக்

கொண்டிருக்கிறார்கள்; அது தொலைந்து போய் விட்டது என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு, அவர் அதாவது நுஸைத், அது இன்ன இடத்தில் உள்ளது என்று அல்லாஹ் அவர்களுக்குக் கூறிவிடுவதில்லையா? என்று கேட்டார். ஸஹாபிகள் அவருடைய இந்தப் பேச்சை விநோதமாகக் கருதினார்கள். அல்லாஹ்வின் எதிரியே! மேலான இறைவன் உன்னை அழித்து விடுவானாக! நீ! நயவஞ்சகனாவாய் என்று அவர்கள் கூறினர்.

அவர் இந்த விஷயத்தைப் பேசியதும் ஈமான் கொண்டிருந்த மக்களுக்கு இதுவோ நயவஞ்சகமான கூற்றாகும் என்று தெரிந்து விட்டது; நீ நயவஞ்சகனாவாய் என்று அவர்கள் கூறினர். பிறகு உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவர்கள் அவன் பக்கம் கவனம் செலுத்தினார்கள். இது பற்றிய ஹுஸூர் (ஸல்) அவர்களின் கருத்து என்ன என்பதைப் பற்றிய அச்சம் எனக்கு இல்லாமல் இருந்திருந்தால், நான் இந்த ஈட்டியை உனக்கு மறுபக்கம் வரவைத்திருப்பேன்; இறைவனின் எதிரியே! உனது உள்ளத்தில் இந்த நயவஞ்சகம் இருந்தது என்றால், பிறகு நீ எங்களுடன் ஏன் புறப்பட்டாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் உலகப் பொருட்களை ஈட்டுவதற்காகப் புறப்பட்டு வந்தேன் என்று கூறினார்.

விஷயம் தெளிவாகிவிட்டது. ஓரளவு வெளி வந்து விட்டது.

ஹுஸூர் (ஸல்) அவர்களோ நமக்கு இதை விட மிகப் பெரிய விஷயங்கள் பற்றி கூறுகிறார்கள்; நமக்கு வானத்து விஷயங்கள் பற்றி கூறுகிறார்கள். அவர்களால் அந்த ஒட்டகத்தை பற்றி கூற முடியதா?

அல்லாஹ் எனக்குப் பெரும் பெரும் முன்னறிவிப்புகளைக் கூறுகிறான் என்று கூறுகிறார்கள். மறைவானவற்றைப் பற்றி கூறி விடுகிறான். ஒட்டகம் பற்றி ஏன் செய்தி தெரிவதில்லை? என்று அவர் ஏளனமாக கேட்டார்.

நயவஞ்சகமான விஷயங்களைப் பேச ஆரம்பித்து விட்டார். அங்கு இருந்தவர்களை அனைவரும் அவர் மீது பாய்ந்தார்கள். உனது உள்ளத்தில் இத்தகைய சிந்தனைகள் இருப்பது எங்களுக்குத் தெரிந்திருந்தால் நாங்களும் நீயும் ஒரு கனம் கூட ஒன்றுகூடியிருக்க மாட்டோம்; இப்பொழுது நாம் ஒன்றாக இருக்க முடியாது என்று கூறினார்கள். ஸஹாபிகள் தன் மீது தாக்குதல் தொடுத்து விடுவார்களோ என்று பயந்து போய் அவர் அங்கிருந்து ஓடி விட்டார். ஸஹாபிகள் அங்கு கிடந்த அவருடைய பொருட்களை எடுத்து வெளியே வீசினார்கள்.

எவ்வாறாயினும், அவர் ஸஹாபிகளிடமிருந்து ஓடி ஒளிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையில் அடைக்கலம் பெறுவதற்காக அமர்ந்து கொண்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அவர் கூறிய விஷயத்தைப் பற்றி விண்ணிலிருந்து வஹீ இறங்கி விட்டிருந்தது. அந்த முனாஃபிக் கேட்டுக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதரின் (ஸல்) ஒட்டகம் தொலைந்து விட்டது என்ற இந்த இன்னலில் நயவஞ்சகர்களில் ஒருவர் மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார். அது இன்ன இடத்தில் என்று அல்லாஹ் அவர்களுக்கு ஏன் கூறிவிடுவதில்லை? ஏனெனில், என் வயது மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்கள் நமக்கு ஒட்டகத்தின் இந்த விவகாரத்தை விடப் பெரிய விவகாரங்கள் குறித்து செய்தி தெரிவித்து வந்துள்ளார்கள் எனக் கூறுகிறார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர மறைவானவற்றை வேறு எவரும் அறியமாட்டார் - அவர் அங்கு அமர்ந்திருந்தபோது இந்த எல்லா விஷயங்களையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் - அவன் எனக்கு அந்த ஒட்டகத்தைப் பற்றி கூறிவிட்டான்.

ஒட்டகம் எங்கே இருக்கிறது? என்று அல்லாஹ் எனக்குக் கூறிவிட்டான்; அது முன்னால் அந்தப் புதரில் இருக்கிறது; அதன் கடிவாளம் மரத்தில் மாட்டியிருக்கிறது. நீங்கள் அந்தப் பக்கம் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஸஹாபா பெருமக்கள் அந்தப் பக்கம் சென்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்குக் கூறியது போன்றே அதைக் காணப் பெற்றார்கள். முனாஃபிக் இதைக் கண்ட போது, அவர் திகைத்துப் போனார். விரைவாக எழுந்து அவர்களுடன் இருந்த தன்னுடைய அந்தக் கூட்டாளியிடம் சென்று விட்டார்.

அவர் அருகில் வந்த போது, எங்களுக்குப் பக்கத்தில் வராதே! என்று ஸஹாபிகள் கூறினார்கள். நான் உங்களிடம் ஒரு விஷயம் பேச விரும்புகிறேன் என்று அவர் கூறினார்.

பின்னர் அவர் அருகில் வந்து, நான் உங்களிடம் அல்லாஹ்வை முன்னிறுத்தி கேட்கிறேன்; உங்களில் யாராவது ஹுஸூர் (ஸல்) அவர்களின் மேலான அவைக்குச் சென்று, நான் கூறிய விஷயத்தை அன்னாருக்குத் தெரிவித்தாரா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் இல்லை. இறைவன் மீது ஆணையாக! நாங்களோ எங்களுடைய இந்த சபையில் இருந்து எழுந்து கூட செல்லவில்லை என்று கூறினார்கள்.

மக்கள் மத்தியில் நான் கூறிய விஷயம் பேசப்படுவதைக் கண்டேன். அவர்களுக்கு இந்த விஷயத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று கூறினார். பிறகு அந்த நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய அந்த விஷயங்கள் அனைத்தையும் அன்னாரது ஒட்டகம் கிடைத்து விட்டது என்பதையும் அவர்களிடம் கூறினார். பிறகு அந்த நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய அந்த விஷயங்கள் அனைத்தையும் அன்னாரது ஒட்டகம் கிடைத்து விட்டது என்பதையும் அவர்களிடம் கூறினார். எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் விஷயத்தில் ஐயம் இருந்தது. அன்னார் அல்லாஹ்வின் உண்மையான தூதர் ஆவார்கள் என்று இப்பொழுது நான் சாட்சி பகர்கிறேன். நான் இன்றுதான் இஸ்லாத்தை ஏற்றது போல் உள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு அவர், இப்பொழுது நான் உண்மையான முறையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினார். ஸஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்வீராக. அவர்கள் உமக்காக பாவமன்னிப்புக் கோரலாம் என்று கூறினார்கள். எனவே அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார். பாவமன்னிப்புக் கோரினார். தனது பாவத்தை ஒப்புக் கொண்டார்.

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: ஸைது, அதாவது அந்த முனாஃபிக் தவ்பா செய்து விட்டார் என்று சிலர் கூறுகிறார்கள். தவ்பா செய்யவில்லை என்றும் கூறப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், இந்த நிகழ்வுகள் இப்பொழுது மேற்கொண்டு இன்னும் சற்று உள்ளன. பின்னர் எடுத்துரைப்பேன்.

இப்பொழுது நான் வங்க தேசத்தின் நிலைமைக்காக அவர்களுக்காக துஆவுக்காகவும் கூற விரும்புகின்றேன். அங்கு அரசாங்கத்துக்கு எதிராகக் குழப்பம் ஏற்பட்டது. அரசாங்கமோ முடிவுக்கு வந்து விட்டது. ஆனால், அந்தக் குழப்பம் தொடர்கிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: இப்பொழுது நேற்றைவிடச் சற்று நிலைமை மேம்பட்டுள்ளது. இதன் காரணமாக ஜமாஅத்தின் எதிரி கூட்டங்கள் இதிலிருந்து பயனடைந்தவாறு அஹ்மதிகளுக்கு இழப்பை ஏற்படுத்தத் துவங்கி விட்டார்கள். நம்முடைய சில பள்ளிவாசல்கள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. அவை எரிக்கப்பட்டுள்ளன. ஜாமிஆ அஹ்மதிய்யா மற்றும் ஜமாஅத் கட்டடங்களுக்கும் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கும் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது. பொருள்கள் எரிக்கப்பட்டுள்ளன.

சில அஹ்மதிகள் காயமடைந்தும் உள்ளார்கள். அங்கு மிகவும் கடுமையாக காயமடைந்துள்ளார்கள். அஹ்மதிகளை அடித்து தாக்கியுள்ளனர். பல அஹ்மதிகளின் வீடுகளுக்கும் இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். அவற்றையும் எரித்து விட்டனர். இன்னும் கூறுவதாயின் சில வீடுகளைப் பற்றி அவற்றை முழுவதுமாக எரித்து விட்டுள்ளதாக தகவல் உள்ளது. சிலருடைய பொருட்களை எரித்துள்ளார்கள். முற்றிலும் அக்கிரமான செயல். அஹ்மதிகளுக்கு இங்கு ஒருமுறை ஜல்ஸாவின் போதும், இப்பொழுது இத்துடன் இரண்டு முறை அந்தப் பகுதியில் இழப்பை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஆனால், அவர்களுடைய ஈமான் எவ்வகையிலும் ஆட்டங்காணவில்லை. அல்லாஹ்வின் அருளால் ஈமானில் உறுதியாக உள்ளார்கள்.

அல்லாஹ்வுக்காக நாங்கள் இதையும் பொறுத்துக் கொள்வோம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக! அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக. எதிரிகளைப் பிடிப்பானாக!

இவ்வாறே பாகிஸ்தானிலும் அஹ்மதிகளின் நிலைமைக்காக துஆ செய்யுங்கள். அங்கும் சற்று மோசமான நிலைமைகள் உருவாகின்றன. அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக! இன்றைய நாட்களில் முல்லாக்கள் மற்றும் லாப நோக்குடையவர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக அதிகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரில் இந்த மக்கள் அநீதியிழைக்கிறார்கள். அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக!

பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அவர்கள் மீது அநீதியிழைக்கும் மக்களையும் அல்லாஹ் பிடிப்பானாக! இந்த அநீதி முடிவுக்கு வரட்டுமாக! பொதுவாக முஸ்லிம் உலகிற்காக துஆ செய்யுங்கள். இவர்கள் ஒருவர் மற்றவர் மீது இழைக்கும் அநீதிகளும் முடிவுக்கு வரட்டுமாக! அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை உருவாக்கக் கூடியவர்களாக ஆவார்களாக! காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளக்

கூடியவர்களாக ஆவார்களாக! இதுவே அவர்கள் எஞ்சியிருப்பதற்கான வழியாகும். ஆனால், இந்த மக்கள் இதைப் புரிவதில்லை.

இப்பொழுது நான் இரண்டு ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். மர்ஹூம்கள் பற்றி எடுத்துக் கூறுகிறேன். முதல் நற்குறிப்பு, மதிப்பிற்குரிய ஃபுகாவுர் ரஹ்மான் ஸாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். இவர்கள் குஜராத் மாவட்டத்தின் லாலா மூஸாவைச் சேர்ந்த சவ்த்ரி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் மகனாவார்கள். கடந்த நாட்களில் ஜல்ஸாவின் நாட்களில் இவர்கள் ஷஹீது ஆனார்கள். ஜூலை 27 ஆம் தேதி ஒன்பதரை மணியளவில் அடையாளம் தெரியாத இருவர் இவர்களுடைய கிளினிக்கில் நுழைந்து துப்பாக்கியால் சுட்டார்கள். அதனால் அன்னார் நிகழ்விடத்திலேயே ஷஹீது ஆகிவிட்டார்கள். .

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்களுக்கு 53 வயதாகி இருந்தது. விவரங்கள் அடிப்படையில் டாக்டர் ஃபுகாவுர் ரஹ்மான் ஸாஹிப் ஷஹீது அவர்கள் வழக்கப்படி கிளினிக் திறந்து அமர்ந்திருந்தார்கள். முகமூடி அணிந்திருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் காலை ஒன்பதரை மணியளவில் மோட்டர் சைக்களில் வந்தார்கள். அவர்களில் ஒருவன் கிளினிக்கில் நுழைந்தான். மற்றொருவன் கிளினிக்கு வெளியே நின்றான். உள்ளே நுழைந்தவன் மதிப்பிற்குரிய டாக்டர் ஸாஹிப் அவர்களை சுட ஆரம்பித்தான். அதனால் அவர்கள் மேல் மூன்று குண்டுகள் பட்டன. அதில் ஒரு குண்டு நெஞ்சில் இதயத்துக்கு அருகிலும், ஒரு குண்டு வயிற்றிலும் ஒரு குண்டு கையிலும் பட்டது.

சம்பவத்துக்குப் பிறகு குற்றவாளிகள் இருவரும் தப்பியோடுவதில் வெற்றி பெற்று விட்டனர். துப்பாக்கி சத்தம் கேட்டு மதிப்பிற்குரிய டாக்டர் ஸாஹிப் ஷஹீது அவர்களின் அக்கம் பக்கத்தில் இருப்பவர் கிளினிக்கு வந்தார். அவர் டாக்டர் ஸாஹிப் அவர்களைக் காயமடைந்த நிலையில் காணப் பெற்றார். டாக்டர் ஸாஹிப் ஷஹீது அவர்களிடம் அவரிடம் ஏதோ சொல்ல முயற்சி செய்தார்கள். ஆனால், ரத்த வாந்தி வந்தது. அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

ஷஹீது ஆனபோது இவர்கள் பாகிஸ்தானில் தனியாகவே இருந்தார்கள். இவர்களின் துணைவியார் யூ.கே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யூ.கேவிற்கு வந்திருந்தார். டாக்டர் ஃபுகாவுர் ரஹ்மான் ஸாஹிப் ஷஹீது அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான சக் சிக்கந்தரைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹாஃபிழ் அஹ்மத் தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது.

அவர்கள் 313 ஸஹாபிகளில் ஒருவராக இருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களின் தந்தை வழிப் பாட்டனாரான மதிப்பிற்குரிய நேக் ஆலிம் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் ஹாஃபிழ் அஹ்மத் தீன் ஸாஹிப் அவர்களின் சகோதரர் மகன் ஆவார்கள். அவர்கள் ஜூன் 10, 1901 இல் பைஅத் செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு ஜஹெல்லம் பயணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இவர்களின் குடும்பத்தில் முன்னரும் ஷஹீதுகள் இருக்கின்றனர். லாஹூரில் ஷஹீதான கலீல் அஹ்மத் சோலாங்கீ ஸாஹிப் அவர்கள் டாக்டர் ஃபுகாவுர் ரஹ்மான் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் மாமா மகன் ஆவார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். நீண்ட காலம் குஜராத் மாவட்டத்தின் லாலா மூஸாவின் செகரட்டரீ மால் ஆக இருந்தார்கள். ஷஹீது ஆனபோது, ஜமாஅத்தின் சத்ர் ஆகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். சந்தாக்களில் முறையாகவும், ஏழைகள், தேவையுடையவர்கள் ஆகியோருக்கு உதவி செய்யக் கூடிய நபராகவும் இருந்தார்கள். இளமைப் பருவத்தில் நிலைமை நன்றாக இருந்தபோது, தப்லீஃக் செய்யும் நோக்கத்தில் நண்பர்களைத் தலைமையகத்தைப் பார்ப்பதற்கும் அழைத்துச் சென்று வந்தார்கள்.

டாக்டர் ஃபுகாவுர் ரஹ்மான் ஸாஹிப் ஷஹீது அவர்களைப் பற்றி குஜராத் மாவட்ட அமீர் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஷஹீது மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். அவற்றில் பொருள் தியாகம் செய்வது தெளிவாகத் தெரியும் ஒரு பண்பாக இருந்தது. பொறுப்பாளர்களுக்கு மற்றும் எல்லாவற்றையும் விட அஹ்மதிய்யா கிலாஃபத்துக்குக் கட்டுப்படும் பண்பும் மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒவ்வொருவரையும் முகமலர்ச்சியுடன் சந்திப்பார்கள். முகத்தில் புன்சிரிப்பு இருந்து வந்தது. படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் உணர்வும் நிறைந்து காணப்பட்டது.

டாக்டர் ஸாஹிப் ஷஹீது அவர்கள் பெரும்பாலும் ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை செய்து வந்தார்கள். இவர்களின் பகுதியில் ஜமாஅத் அல்லாத மக்களுடன் தொடர்புகள் நன்றாக இருந்தன. அதைப் பற்றி ஜமாஅத் அல்லாத மக்கள் இவர்கள் ஷஹீது ஆன பிறகு கூறினார்கள். ஜமாஅத் அல்லாத சிலர் இவர்களின் ஜனாஸாவிலும் கலந்து கொண்டனர்.

அமீர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: 2024 ஈதுல் அழ்ஹாவுக்கு முன்பு டாக்டர் ஸாஹிப் அவர்கள் என்னிடம், அரசாங்க அதிகாரிகள் வந்தார்கள். உங்களுடைய உயிருக்கு ஆபத்து இருக்கின்றது. எனவே நீங்கள் பெருநாள் வரை கிளினிக்கில் அமராதீர்கள் எனக் கூறினார்கள்.

ஆனால் எவ்வாறு இருப்பினும், இவர்களிடம் துணிச்சல் இருந்தது. அமர்ந்து வந்தார்கள். மர்ஹூம் அவர்கள் துணைவியார் மதிப்பிற்குரிய நகீனா ரஃபீக் ஸாஹிபா, ஒரு மகன் மற்றும் மூன்று மகள்களைப் பின்விட்டுச் சென்றுள்ளார்கள். இரண்டு மகள்களுக்குத் திருமணம் ஆகிவிட்டிருந்தது. ஒரு மகள் ஜெர்மனியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் ஷஹீது அவர்களின் அந்தஸ்தைக் உயர்த்துவானாக! இவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பொறுமையை வழங்குவானாக!.

> *திருக்குர்ஆனிலிருந்து...*
>
> நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)
>
> A. Nasir Ahmad
> (District Ameer, Melapalayam)

பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!.

இரண்டாவது ஜனாஸா மலிக் பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஸய்யிதா பஷீர் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 83 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகனும் இரண்டும் மகள்களும் உள்ளார்கள். இவர்கள் கானாவில் இயக்கத்தின் முரப்பியான மலிக் குலாம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் தாயாராக இருந்தார்கள். அவர்கள் செயற்களத்தில் இருந்தன் காரணமாக தம் தாயார் அவர்களின் ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

இவர்களின் மகன் குலாம் அஹ்மத் ஸாஹிப் முரப்பி கூறுகிறார்கள்: இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி, இவர்களின் தந்தை வழிப் பாட்டனார் ஹஸ்ரத் மலிக் அல்லாஹ் பக்ஷ் ஸாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் செயல்படும் அறிஞராக, நல்லியல்பு கொண்ட நபராக இருந்தார்கள். அவர்கள் சூரிய சந்திர கிரகணத்தின் சாட்சியைப் பார்த்து ஹூத(ஹ) ரானிலிருந்து காதியானுக்கு நடை பயணம் மேற்கொண்டு பைஅத் செய்யும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

இவர்களின் தாயார் அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான், ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் பரிவிலிருந்தும் பங்கு பெற்று வந்தார்கள். முரப்பி ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

எங்கள் தாயார் எங்களிடம், ரப்வாவில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் அன்பு எனக்கு அதிகம் கிடைத்தது என்று கூறிவந்தார்கள்.

தாயார் கூறினார்கள்: நான் அவர்களிடம் இருந்து வந்தேன். எனக்கு ஏதோ காரணத்தினால், ரொட்டி பிடிக்கவில்லை. பெரும்பாலும் நெருக்கடியான நிலைமை இருந்தாலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் என்னிடம் பணம் கொடுத்து, சந்தையிலிருந்து உனக்கு பன் வாங்கி வா என்று கூறுவார்கள். பிறகு நான் பாலுடன் சேர்த்து அதனை சாப்பிடுவேன்.

தாயார் கூறுகிறார்கள்: ஒருமுறை நான் சிறுபிள்ளையாக இருந்தபோது, ஏதோ காரணத்தினால் அழுது கொண்டிருந்தேன். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மிகவும் அன்புடன் என்னைத் தம் மடி மீது வைத்து என்னிடம் அன்பு செலுத்தினார்கள். பிறகு தம் கைகளால் உணவூட்டினார்கள். மகன் கூறுகிறார்கள்: என் தாயார் ஓர் அனாதை பிள்ளையைப் போன்று வளர்ந்து வந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மற்றும் பிற சான்றோர்களின் தூய உடனிருப்பு அன்னாரிடம் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

வாழ்நாள் முழுவதும் முறையாக தஹஜ்ஜுதை நிறைவேற்றி வந்தார்கள். தொழுகைகளை முறையாக பேணி வந்தார்கள். தாம் மட்டுமல்லாமல் பிள்ளைகளுக்கும் கூறி வந்தார்கள். பார்வை குறைவு இருந்தும் ரமலானில் திருக்குர்ஆனை இரண்டு அல்லது

மூன்றுமுறை ஓதி முடிப்பார்கள். கிலாஃபத்துடன் மிகவும் அன்பான தொடர்பு இருந்தது; நன்றியுணர்வின் தொடர்பு இருந்தது; களங்கமற்ற தன்மையின் தொடர்பு இருந்தது. கலீஃபாக்களின் குத்பாக்கள் மற்றும் உரைகளை மிகவும் முறையாக, அமைதியாகக் கேட்டு வந்தார்கள்.

பிறகு இவர்கள் ஒரு சிறப்பை எழுதியுள்ளார்கள்: யாரிடமும் உரத்த குரலில் பேசுவது முற்றிலும் பிடிக்காமல் இருந்தது. இன்னும் சொல்வதாயின், பிள்ளைகள் சத்தம் போட்டு பேசினாலும் அவர்களைத் தடுப்பார்கள். மகன் கூறுகிறார்கள்: நான் அவர்களை எப்பொழுதும் தம் கணவருக்கு உண்மையான வாழ்க்கைத் துணையாக இருக்கக் கண்டேன். பிள்ளைகளை - எங்களைத் தொழுகையை முறையாகப் பேணுபவர்களாக ஆக்கினார்கள். யஸ்ஸர்னல் குர்ஆன் ஓதிக் கொடுத்தார்கள். பிறகு திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பின் மீதான அன்பை உள்ளத்தில் பதிய வைத்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகைகளைத் தொழுத அந்த அருளுக்குரிய இடங்களில் தொழுகைகளைத் தொழும் பொருட்டு எனக்கு நம்முடைய ஸியால்கோட் பள்ளிவாசல் செல்ல வேண்டும் என்று ஆசையாக உள்ளது என இவர்கள் கூறிவந்தார்கள்.

ஆக முரப்பி கூறுகிறார்கள்: தற்செயலாக நான் அங்கு பணியமர்த்தப்பட்டேன். அப்பொழுது நான் பெற்றோரை சியால்கோட்டுக்கு அழைத்துச் சென்றேன். தாயார் அங்கு சென்று பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் தொழுகைகளை, நஃபில்களை மிகவும் உருக்கத்துடன் நிறைவேற்றினார்கள். தமது உள்ளத்து ஆசை நிறைவேறியதற்காக அல்லாஹ்வுக்கு நன்றியும் செலுத்தினார்கள். மிகவும் அதிகமாக துஆக்கள் செய்யக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொள்ளக் கூடியவர், உலகின் சுகபோகங்கள், ஆசைகள் ஆகியவற்றை விட்டும் முறையாக விலகியிருக்கக் கூடிய, களங்கமற்ற பெண்மணியாகவும், மற்றும் எல்லா விதத்திலும் முன்னுதாரணமான பெண்மணியாகவும் திகழ்ந்தார்கள்.

அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களின் நன்மைகள் இவர்களின் பிள்ளைகளிடமும் தொடரட்டுமாக! அடுத்த சந்ததிகளிடமும் தொடரட்டுமாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)


## 1- ம் பக்கத் தொடர்ச்சி....(தஃப்ஸீரே கபீர்)

மூக்கும் அடங்கும். அவரது (மொத்த) உடலும் அடங்கும். பின்னர் مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ என்பதில் அவரது வீடும் அடங்கும். அவர் பயன்படுத்தும் கோதுமையும் அடங்கும். இன்னும் கூறப்போனால், விவசாயி உற்பத்தி செய்யும் முள்ளங்கியும், கேரட்டும் அடங்கும். பணத்தை (அல்லாஹ்வின் வழியில்) செலவு செய்து ஒரு நபர் பொருள் தியாகம் செய்யக் கூடியவராக ஆக முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் ஷரீஅத் பொருள் தியாகம் செய்வதற்கு மட்டும் கட்டளை வழங்கவில்லை. மாறாக, நாம் உமக்கு என்னவெல்லாம் வழங்கியிருக்கின்றோமோ அதில் ஒரு பகுதியை நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிட வேண்டும் என்று ஷரீஅத் கூறுகின்றது. எனவே ஒரு நபர் தமது அனைத்து சொத்துக்களையும் (அல்லாஹ்வின் வழியில்) சந்தாவாக கொடுத்து விடுகின்றார்; ஆனால் அவரது கண்கள் அல்லாஹ்வின் வழியில் அடியார்களுக்கு தொண்டாற்றுவதில் பங்கு பெறவில்லை என்றால், அவரது கைகளும், பாதங்களும் அல்லாஹ்வின் வழியில் அடியார்களுக்கு சேவை செய்வதில் பங்கு பெறவில்லை என்றால், பின்னர் நான் எனது அனைத்து சொத்துக்களையும் கொடுத்து எனது கடமையை நிறைவேற்றி விட்டேன் என்று அவர் கூறமுடியாது. இந்த விஷயம் தர்க்க நீதியிலானது என்று கூறப்படும். ஆனால், மார்க்கமாக கூறப்பட முடியாது. மார்க்கத்தின் தேட்டங்களை பூர்த்தி செய்வதற்காக அவர் தமது உடலை இறைவனின் அடியார்களின் சேவைக்காக பயன்படுத்த வேண்டும் என்பது அவசியமாகும். கியாமத் நாளன்று அனைத்து மனிதர்களும் இறைவனுக்கு முன்னால் நிறுத்தப்படும்போது அவன் சில மக்களிடம் இவ்வாறு கூறுவான்: அதாவது என்னுடைய அடியார்களே! நான் பசியுடன் இருந்தேன். நீங்கள் எனக்கு உணவளித்தீர்கள்; நான் தாகத்துடன் இருந்தேன். நீங்கள் எனக்கு தண்ணீர் கொடுத்தீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு உடுத்த ஆடை கொடுத்தீர்கள். நான் நோயுற்று இருந்தேன்; நீங்கள் என்னை நலம் விசாரித்தீர்கள். எனவே நீங்கள் செல்லுங்கள்; மேலும் எனது சொர்க்கத்தில் நுழையுங்கள்.

அப்போது அந்த அடியார்கள் கூறுவர்: தவ்பா! தவ்பா! நாங்கள் உனக்கு உணவளிப்பதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் அல்லது உடுத்த ஆடை கொடுப்பதற்கும் அல்லது உன்னை நலம் விசாரிப்பதற்கும் எங்களுக்கு என்ன வலிமை இருக்கின்றது? மேலும் நீயோ இந்த அனைத்து விஷயங்களில் இருந்தும் தூயவன் ஆயிற்றே!

அப்போது இறைவன் கூறுவான்: நீங்கள் கூறுவது சரிதான். ஆனால், என்னுடைய ஒரு வறிய அடியார் உங்களிடத்தில் வந்தார். மேலும் அவர் பசியோடு இருந்தார். நீங்கள் அவருக்கு உணவு கொடுத்தீர்கள். ஆக ஒருவகையில் நீங்கள் எனக்கே உணவு கொடுத்தீர்கள். மேலும் இதேபோன்று என்னுடைய மிகவும் வறிய ஓர் அடியார் உங்களிடத்தில் வந்தார். அவர் தாகித்து இருந்தார். நீங்கள் அவருக்கு தண்ணீர் கொடுத்தீர்கள். இவ்வாறு நீங்கள் எனக்கு தண்ணீர் கொடுத்தீர்கள். இதேபோன்று நீங்கள் ஆடையற்று இருந்த ஒருவருக்கு உடுத்த ஆடை கொடுத்தீர்கள்; ஒரு நோயாளியிடம் சென்று நலம் விசாரித்தீர்கள். இவ்வாறு நீங்கள் ஓர் அடியாருக்கு உடுத்த உடை கொடுக்கவில்லை ; ஓர் அடியாரை நலம் விசாரிக்கவில்லை. மாறாக உள்ளபடியே நீங்கள் எனக்கு உடை கொடுத்தீர்கள்; மேலும் நீங்கள் என்னை நலம் விசாரித்தீர்கள். எனவே செல்லுங்கள்; சென்று என்னுடைய சொர்க்கத்தில் நுழையுங்கள்.

சுருக்கமாக, مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ என்பதில் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது.

பாருங்கள்! இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒருமுறை பொருள் தியாகம் செய்யும்படி கூறினார்கள். அப்போது ஒரு ஸஹாபியிடத்தில் வேறு எந்தப் பொருளும் இருக்கவில்லை. எனவே இரண்டு கையளவு சோளம் கொண்டு வந்தார். அவற்றை அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொடுத்து விட்டார். அப்போது இந்த விஷயத்தை நயவஞ்சகர்கள் கண்டதும் அவர்கள் சிரிக்கத் தொடங்கினர்; மேலும், பாருங்கள்; இனி இந்த இரு கையளவு சோளத்தால் உலகை இவர்கள் வெற்றிக் கொள்ளப் போகின்றனர் என்று கூறினர்.ஆனால், உண்மையில் அவர்கள் கண் திறந்து பார்த்திருந்தால் இந்த விஷயத்தை புரிந்திருப்பர். அதாவது, இது இரு கையளவு சோளம் அல்ல. மாறாக இஸ்லாத்தின் மீதான நேசத்தில் நிம்மதியிழந்து போன ஓர் இதயத்தின் இரண்டு துளி இரத்தம் ஆகும் என்பதை அவர்கள் புரிந்திருப்பர். அவர் அதனை முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வந்து முன்வைத்துவிட்டார். மேலும் உலகம் இதயத்தின் இரத்தத்தின் துளிகளாலேயே வெற்றிக் கொள்ளப்படுகின்றதே தவிர பௌதீகப் பொருட்களால் அல்ல. எனவே முழுமையான ஈமானின் அடையாளம் இதுவாகும். நீங்கள் வீட்டில் எவற்றையெல்லாம் உண்கின்றீர்களோ மேலும் நீங்கள் எவற்றை எல்லாம் சம்பாதித்து வைத்துள்ளீர்களோ, அதன் ஒரு

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)





Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

பகுதியை இறைவனின் வழியிலும் கொடுக்க வேண்டும்; மேலும் உங்களுடைய ஒவ்வோர் ஆற்றலையும் மனிதகுலத்தின் நன்மைக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் செலவு செய்ய வேண்டும்.

( தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 52, காதியான் பதிப்பு 2010 -ம் ஆண்டு)

12ம் பக்கத் தொடர்ச்சி.. (குத்பா பேருரை 16.7.24)

பலதரப்பட்ட நிழற்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

அதனை கண்டிப்பாக பாருங்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்பாக யூ.கேவின் நூற்றாண்டு வரலாற்று கண்காட்சி இருக்கின்றது. இதேபோன்று ரீவ்யூ ஆஃப் ரிலிஜன்ஸுடைய கண்காட்சி இருக்கின்றது. ஆர்கைவிஸ் மற்றும் தப்லீஃக் துறையின் கண்காட்சி ஆகும். மக்ஸனே தஸாவீர் துறையின் கண்காட்சி இருக்கின்றது. இந்த அனைத்து கண்காட்சிகளும் பார்வையிட வேண்டியவை ஆகும். அவர்கள் மிகச் சிறப்பாக அதனை வடிவமைத்து இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஓய்வு நேரத்தில் இங்கும் அங்கும் நேரத்தை வீணடிப்பதற்கு பகரமாக இந்தக் கண்காட்சிகளை சென்று பார்வையிடுங்கள்.

இதே போன்று ஏற்பாட்டாளர்களுக்கு இவ்வாறும் வழிகாட்டல் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது உலகில் தற்போது சில இடங்களில் கோவிட் நோயாளிகள் அதிகம் தென்படத் தொடங்கி விட்டனர். இங்கும் சில இடங்களில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே இங்கு பல்வேறு இடங்களில் இருந்து மக்கள் வருகை தந்துள்ளனர். மேலும், ஒருவர் கோவிட் தொற்றையும் எடுத்து வந்திருக்கக் கூடும். எனவே கேட்டுகளில், நுழைவு வாசல்களில் தடுப்பு மருந்தாக ஹோமியோபதி மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அதனை கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கேட்டிற்குள் நுழையும் ஒவ்வொரு நபரும் ஏற்பாட்டாளர்கள் அவர்களுக்கு மருந்து கொடுத்தால் அதனை அவர்கள் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்னும் கூறப்போனால் நீங்களாகவே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் அனைவரையும் எல்லா வகையான நோய்களிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக.

இதேபோன்று செக்யூரிட்டி (பாதுகாப்பு) ஏற்பாடு இருக்கின்றது; முன்னரும் நான் கூறியிருக்கின்றேன். பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக ஒவ்வோர் ஆண்டும் நான் கூறுகின்றேன். அதாவது எல்லாவற்றையும் விட நாம் நமது வலப் பக்கமும், இடப்பக்கத்தையும் கண்காணித்து வருவதே எல்லாவற்றையும் விட பெரும் பாதுகாப்பு ஏற்பாடாகும். மேலும் ஒவ்வொருவரும் மற்றவரை பார்த்துக் கொண்டிருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இது எல்லாவற்றையும் விட சிறந்த பாதுகாப்பு ஏற்பாடாகும். இது நிகழ்ந்து விட்டால் பின்னர் எந்த எதிரிக்கும், எதிராளிக்கும் எவ்வகையான தீங்கை பரப்புவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்காது.

இதேபோன்று பேக் போன்ற கேட்பாரற்ற பொருட்கள் எங்காவது கிடப்பதாக பார்த்தால் பின்னர் மாநாட்டு ஏற்பாட்டாளருக்கு தகவல் கொடுத்து விடுங்கள். மேலும் யாரோ ஒருவரின் நடத்தை சந்தேகத்திற்குரியதாக இருப்பதைக் கண்டால் பின்னர் அப்போதும் நிர்வாகத்தினருக்கு கூறிவிடுங்கள். எவ்வாறு இருப்பினும், இந்த நாட்களில் பாதுகாப்பின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துங்கள். ஆனால், எல்லாவற்றையும் விட நம்மிடம் இருக்கும் பெரிய ஆயுதம் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுதல் ஆகும். மேலும் அவனது அடைக்கலத்தை பெறும் பொருட்டு துஆக்கள் மற்றும் திக்ரே இலாஹியின் பக்கம் நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதன் பக்கம் குறிப்பாக இந்த மூன்று நாட்களில் அழுத்தம் கொடுங்கள்.

இதன் படி அமல் செய்யக் கூடியவர்களாக ஆகுவதற்கும், மேலும் இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் எல்லாருக்கும் அருளுக்குரியதாக அமைவதற்கும் அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஆகஸ்ட் 16, 2024, பக்கம் 2 -5)

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

## நல்லொழுக்கம் நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நல்லொழுக்கம் ஏனைய நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும். எந்த மக்கள் ஒழுக்கத்தை சீர்படுத்திக் கொள்வதில்லையோ அவர்கள் மெதுமெதுவாக நன்மை பயக்காதவர்களாகி விடுகின்றனர். எனது கோட்பாடு என்னவென்றால் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் நன்மையளிக்கின்றது. விஷமும், குப்பையும் கூட பயன்படுகின்றது. ஸ்ட்ரைக்னைன் கூட பயன்படுகின்றது. மனித தசைகளின் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், உயர் ஒழுக்கங்களை பெறாமல் பயனளிக்கக் கூடிய இருப்பாக ஆகாத மனிதன் எந்தப் பணிக்கும் பயன்படாதவனாக ஆகிவிடுகின்றான். இறந்த விலங்குகளைக் காட்டிலும் கீழானவனாக ஆகிவிடுகின்றான். ஏனெனில், அவற்றின் தோலும், எலும்புகளும் கூட பயன்படுகின்றன. (ஆனால் மனிதனாகிய) அவனுடைய தோலும் கூட பயன்படுவதில்லை.

எனவே, நினைவிற் கொள்ளுங்கள்! ஒழுக்கங்களை சீர்படுத்திக் கொள்வது மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில், நன்மைகளின் தாய் நல்லொழுக்கமே ஆகும். மனிதன் ஆற்றல் பெறுகின்ற நன்மைக்கான முதல் படித்தரம் நல்லொழுக்கம் ஆகும். கல்க் மற்றும் குல்க் என்ற இரண்டு சொற்கள் உள்ளன. கல்க் என்பது வெளிப்படையான படைப்பின் பெயர் ஆகும். குல்க் என்பது மறைமுகமான படைப்பின் பெயர் ஆகும். உதாரணமாக, வெளிப்படையில் ஒருவர் அழகானவராக இருக்கின்றார். மற்றொருவர் மிகவும் மோசமானவராக இருக்கின்றார். இதேபோன்று ஒருவர் உள்ளார்ந்த படைப்பில் மிகவும் அழகியவராகவும், உள்ளம் கவர்ந்தவராகவும் இருக்கின்றார். மற்றொருவர் உள்ளுக்குள் தொழுநோய் மற்றும் விட்டிலிகோவ் என்ற நோயால் பாதிக்கப்பட்டவரைப் போன்றும் அறுவறுக்கத்தக்கவராக இருக்கின்றார். ஆனால், வெளிப்படையான உருவமே தென்படுகின்றது. எனவே ஒவ்வொரு நபரும் தான் வெளிப்படையாக பார்ப்பதையே அடையாளம் கண்டு கொள்கின்றார். மேலும் அழகை விரும்புகின்றார். மேலும், அழகற்றவராகவும், மோசமான உருவம் கொண்டவராகவும் இருப்பதை விரும்புவதில்லை. ஆனால், அதனை அவர் பார்க்கின்றார். எனவே அதனை அவர் விரும்புகின்றார். மேலும், ஒழுக்கத்தை பார்ப்பதில்லை. எனவே அதன் சிறப்புகளை அறியாதவராக திகழ்ந்து அதனை விரும்புவதில்லை. ஒரு கண் பார்வையற்ற நபரை பொருத்த வரை அழகும், அழகற்றதும் இரண்டும் ஒன்றே ஆகும். இதேபோன்று, அகப்பார்வையைப் பெற்றிராத அந்த மனிதர் இந்த கண் பார்வையற்றவரைப் போன்றவர் ஆவார். கல்க் என்பது வெளிப்படையான விஷயம் ஆகும். ஆனால் குல்க் என்பது ஒரு தத்துவம் சார்ந்த விவகாரம் ஆகும். ஒழுக்கச் சீர்கேடுகள் மற்றும் அவற்றின் சாபங்களைப் பற்றி அறிந்திருந்தால் பின்னர் உண்மை தெளிவாகிவிடும்.

சுருக்கமாக, நல்லொழுக்கத்தின் அழகு எப்படிப்பட்ட ஓர் அழகு என்றால், அதனையே உண்மையான அழகு என்று கூறவேண்டும். மிகக் குறைவானவர்களே இதனை அடையாளம் காண்கின்றனர். நல்லொழுக்கம் என்பது நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும். உதாரணமாக, ஒரு தோட்டத்தின் கதவுகள் தாழிடப்பட்டிருக்கின்றன; தொலைவில் பூக்களும், கனிகளும் தென்படுகின்றன. என்றால் ஒருவரால் உள்ளே செல்ல முடியாது. ஆனால், பூட்டத் திறக்கப்பட்டு விட்டால் பின்னர் உள்ளே சென்று பார்க்கும் போது முழு உண்மையும் அவருக்கு தெரிந்து விடுகின்றது. மேலும், உள்ளத்திற்கும் மனதிற்கும் ஒரு மகிழ்ச்சியும்,புத்துணர்வும் கிடைக்கின்றது. நல்லொழுக்கத்தை பெற்றுக் கொள்வது என்பது ஒருவகையில் பூட்டைத் திறந்து உள்ளே நுழைவது போன்றதாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 481, காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * *

# ஜுமுஆ பேருரை

**பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது விருந்தினர்கள் மற்றும் விருந்து உபசரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான அறிவுரைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் ஒளியில் ஸலாத்தை பரப்புவதற்கான அறிவுரை**

அல்லாஹ்வின் அருளால் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு மார்க்க மற்றும் ஆன்மிக சூழலில் இருந்து பயன்பெறுவதற்காக வந்துள்ளனர். இந்த நாட்களில் இங்கு ஹதீக்கத்துல் மஹ்தியில் ஒரு தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் தங்கி நாம் உலக கேளிக்கைகளிலிருந்து விலகி இருந்து நமது மார்க்க, ஆன்மிகம் மற்றும் நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அவர்களிடம் என்ன டியூட்டிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அவற்றை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மிகச் சிறந்த முறையில் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவின் விருந்தினர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தாளிகளாக கருதுங்கள்.விருந்தினர்கள் புறமிருந்து உங்களின் பார்வையில் ஏதாவது அநீதியிழைக்கப்பட்டாலும் கூட பின்னர் நீங்கள் அதனை பொருட்படுத்தாதீர்கள்

சில விஷயங்களை விருந்தினர்களுக்கும் நான் கூற விரும்புகின்றேன்.
நீங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக இங்கு வந்துள்ளீர்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களாக இங்கு வந்துள்ளீர்கள். உலகியல் பெருமை மற்றும் உலகியல் சேவைகளுக்கு எதிரில் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் தனித்துவமாக இருக்கக் கூடிய அந்த உயர் நல்லொழுக்கத்தில் மேலும் முன்னேற்றம் காண்பதை உங்களது கருத்தில் கொள்ளுங்கள்

நீங்கள் உங்களை ஒருபோதும் உலகியல் பயணிகள் மற்றும் விருந்தினர்களின் வட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதீர்கள். இந்த விஷயத்தை நீங்கள் புரிந்து கொண்டால் பின்னர் விருந்தாளிகளின் பலவீனங்களையும், குறைகளையும், நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **வஃபா** மாதம் **26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

அடுத்து இவ்வாறும் நிகழ்கின்றது. அதாவது உணவு உண்ணும் கூடாரத்திலும் பேச்சுகளில் ஈடுபடுகின்றனர்; மேலும் உணவு உண்ணும்போது மக்கள் நீண்ட உரையாடல்களில் மும்முரமாகி விடுகின்றனர். இதனால் சிலமுறை நிர்வாகத்தினருக்கும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எந்த அளவு நேரத்தை அங்கு கழிக்கின்றனர் என்றால் தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டது அல்லது மிக அதிக நேரம் ஆகிவிட்டது என்றோ அவர்களுக்கு நினைவூட்ட வேண்டிய அவசியம் ஊழியர்களுக்கு ஏற்படுகின்றது. எவ்வாறிருப்பினும், அதேபோன்று வீடுகளில் தங்க வைப்பவர்களுக்கும் இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படக் கூடும். எனவே நடுநிலையான பாங்குடன் செயல்பட வேண்டும். விருந்து உபசரிப்பவர்களும் தங்களது பணியை நிறைவு செய்து பின்னர் அடுத்த வேளைக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்ற இந்த விஷயத்தை விருந்தினர்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்த விருந்தினர்கள் தொடர்பாக அல்லாஹ்வின் கட்டளை இவ்வாறாகவே இருந்தது. அதாவது அமர்ந்து கொண்டு உரையாடலில் நேரத்தை வீணடிக்காதீர்கள்; உண்ணலும், பருகலும் முடிந்து விட்டால் பின்னர் எழுந்து சென்று விடுங்கள். (அல் அஹ்ஸாப்: 54)

எனவே குறிப்பாக உணவு கூடாரத்தில் அதிக கூட்டம் இருக்கும்போது சிலமுறை ஷிஃப்ட் முறையில் உணவு பரிமாற நேரிடுகின்றது. எனவே உணவு உண்டு விட்டு உடனடியாக எழுந்து விடவேண்டும். அப்போதுதான் மற்ற மக்களும் வரமுடியும். மேலும் எளிதாக உணவு உண்ண முடியும். எனவே இந்த விஷயங்கள் மேற்கொள்ளப்பட்டால் பின்னர் எவ்வகையான முறையீடுகளும் உருவாகாது. மேலும் இந்த மகிழ்ச்சிகரமான சூழலில் அனைத்து பணிகளும் நடைபெற்று கொண்டிருக்கும்.

அடுத்து, இதேபோன்று பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஒன்றுகூடும்போது சிலமுறை சில கசப்பான சம்பவங்களும் நிகழ்ந்து விடுகின்றன. சிலமுறை அமைப்பின் மீதான புகாரின் காரணமாக விருந்தினர் ஓர் ஊழியரை ஏசிபேசி விடக் கூடும்; ஊழியரும் அவருக்கு பதில் கொடுத்து விட்டால் பின்னர் பிரச்சனை மேலும் அதிகரித்துவிடுகின்றது. மேலும் இவ்வாறு பகைமைகளுக்கான ஒரு தொடர் ஆரம்பமாகிவிடுகின்றது. அது மிக மிக அரிதான ஒரு சில சம்பவமாகவே இருந்தாலும் கூட அதனால் சூழல் பதற்றமாகி விடுகின்றது. மற்ற மக்களும் கூட தாக்கத்திற்குள்ளாகி விடுகின்றனர். புகார் கூறக் கூடியவர் அல்லது தவறான விஷயத்தை கூறக் கூடியவர் இங்கு வசிக்கக் கூடியவராக இருந்தால் அதாவது யூ.கே வைச் சேர்ந்தவராக இருந்தால் பின்னர் இந்த தொடர் இன்னும் நீண்டு விடுகின்றது. மேலும் வேறு சந்தர்ப்பங்களிலும் அது வெளிப்படுத்தப்படுகின்றது. இங்கு மட்டும் அல்ல ; மற்ற நாடுகளிலும் இதே விஷயம் காணக் கிடைக்கின்றது.






உண்மையான நம்பிக்கையாளரைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் கோபத்தை அடக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் அநீதியிழைக்கக் கூடியவர் அல்லது எவர் மீது அநீதியிழைக்கப்படுகின்றதோ அவர்கள் இருவருக்கும் நான் கூறுகின்றேன். ஜல்ஸாவின் சூழலின் புனிதத்துவத்தை கருத்தில் கொள்ளுங்கள்; மேலும் விருந்தினர்களும் கண்டும் காணாமல் இருங்கள்; மேலும் மன்னித்தலை கைகொள்ளுங்கள்.

ஒருவேளை அவர்களின் பார்வையில் அநீதி இழைக்கப்பட்டிருந்தாலும் கூட பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் செயல்படுங்கள். பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்துங்கள். மேலும் விருந்தினர்கள் புறமிருந்து அநீதி இழைக்கப்பட்டிருந்த போதிலும் அதாவது விருந்தினர்கள்தான் அநீதி இழைக்கின்றனர் என்று அவர்கள் கருதுகின்றனர் என்றாலும் கூட ஊழியர்கள் தங்களது கோபத்தை கட்டுப்படுத்துங்கள்; மேலும் கோபத்தை

விழுங்கி விடுங்கள்.

அதேபோன்று (அடையாள) அட்டைகள் பரிசோதிக்கும் விஷயங்கள் இருக்கின்றன ; மேலும் பாதுகாப்பு பரிசோதனைகளும் இன்றைய சூழ்நிலைகளில் மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. மிகவும் எச்சரிக்கையாக இருக்க நேரிடுகின்றது. அதற்கான பல்வேறு கட்டங்களை கடந்து செல்வதன் காரணத்தால் சில மக்களுக்கு துன்பங்கள் நேரிடக் கூடும். மேலும் காலதாமதமும் ஆகிவிடக் கூடும். மேலும் குறிப்பாக பெண்களுக்கு மத்தியில் இந்த பிரச்சனை அதிகம் ஏற்பட்டு விடுகின்றது. ஏனெனில், அவர்களுடன் குழந்தைகளும் இருக்கின்றனர். மேலும் அவர்களுடைய பொருட்களும் இருக்கின்றன. பெண்கள் சிலமுறை ஏராளமான பேக்குகளை உடன் எடுத்துக் கொண்டு வருகின்றனர். மேலும் ஒவ்வொரு பேக்குகளையும் பரிசோதிப்பதில் காலதாமதம் ஆகிவிடுகின்றது. எனவே ஒன்று பெண்களும் இதற்கு முயற்சி செய்ய வேண்டும்; அதாவது இன்று அவர்கள் அதிக பொருட்களை எடுத்துக் கொண்டு வந்திருந்தால் சரி; ஆனால் ஜல்ஸா திடலில் தங்காத, வெளியில் இருந்து வரக் கூடிய மக்கள் இருக்கின்றனர். பெரும்பாலும் வெளியில் இருந்து தான் வரக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்கள் எதிர்வரும் நாட்களில் குறைந்தபட்ச பொருட்களை எடுத்துக் கொண்டு வாருங்கள். அப்போதுதான் பரிசோதனையில் குறைவான நேரம் செலவாகும். குழந்தைகளைக் கொண்டு வரக் கூடியவர்கள் இருக்கின்றனர். அவர்கள் குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை மட்டுமே கொண்டு வரவேண்டும். தேவையில்லாத பொருட்களை உடன் எடுத்துக் கொண்டு வராதீர்கள். ஏனெனில், இதனால் தேவையில்லாமல் காலதாமதம் ஏற்படுகின்றது. நேரம் வீணாகின்றது. மாநாட்டு அமைப்பினரின் நேரமும் வீணாகின்றது. மேலும் (ஏனைய) மக்களின் நேரமும் வீணாகின்றது. மக்களுக்கு வரிசையில் நின்று கொண்டு காத்திருக்க நேரிடுகின்றது. பின்னர் மாநாட்டு அமைப்பினர் மீது குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் உள்ளபடியே பொறுப்பு என்பது சிலமுறை ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடியவர்களுடையதாகவே இருக்கின்றது. ஏனெனில், மக்களுடைய பொருட்களும், சாமான்களும் எவ்வளவு அதிகமாக இருக்கின்றது என்றால் நான் கூறியது போன்று பரிசோதனை செய்வதில் நேரம் அதிகமாகி விடுகின்றது.

அடுத்து ஒரு நம்பிக்கையாளருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள கட்டளையும் வழிகாட்டலும் இதுவாகும். அதாவது நீங்கள் உங்களுடன் தொடர்பை முறித்துக் கொள்ளக் கூடியவர்களுடனும் தொடர்பை நிலைநாட்டுங்கள் என்பதாகும். எவர் உங்களுக்கு கொடுப்பதில்லையோ அவருக்கும் கொடுக்க வேண்டும். அதுவன்றி எவர் உங்களின் தேவையின்போது உங்களுக்கு உதவி செய்யவில்லையோ அவரது தேவையின் போது பழிவாங்கியவாறு நீங்களும் அவருக்கு உதவி செய்யாமல் இருக்காதீர்கள். கூறினார்கள்: எவர் உங்களை ஏசிபேசுகின்றாரோ அவரையும் மன்னித்து விடுங்கள். (முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 5, பக்கம் 373, ஹதீஸ் 15703, ஆலமுல் குதுப் பெய்ரூத் பதிப்பு, 1998-ம் ஆண்டு)

ஆக, இங்கோ ஏசிபேசுவதற்கான கேள்விக்கே இடமில்லை. இங்கோ ஊழியர்களிடம் கொடுக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுகின்றார்கள். ஒருவேளை இங்கு அறியாமல் ஓர் ஊழியரிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டாலும் கூட அல்லது பரிசோதிக்கும் போது காலதாமதம் ஆகிவிட்டால் அல்லது ஒருவருடைய அடையாள அட்டையின் மீது ஏதாவது ஆட்சேபனை உருவாகிவிட்டால் பின்னர் அதனை தவறாக கருதாமல் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். இந்த விஷயங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள பரந்த மனப்பான்மையின் பக்கம் வழிநடத்துகின்றன.

பரந்த மனப்பான்மை உருவாகி விட்டால் பின்னர் அனைத்து மனகசப்புகளும், சண்டைகளும் தீர்ந்துவிடும். எனவே விருந்தினர்கள் மற்றும் டியூட்டி கொடுக்கப்பவர்கள் இருவரிடமும் நான் கூறுகின்றேன்: பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துவது அவர்களின் கடமையாகும். பரிசோதனை செய்யக் கூடியவர்களும் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது வரக் கூடிய விருந்தினர்களுக்கு எந்த அளவிற்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு ஏற்படுத்திக் கொடுக்க முயற்சி செய்யுங்கள். மேலும் அதற்காக நிர்வாகத்திற்கு அதிகமான ஊழியர்களை பணியில் ஈடுபடுத்த நேரிட்டால் கூட ஈடுபடுத்த வேண்டும். குறிப்பாக கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும் நேரத்தில் அவ்வாறு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப இவ்வாறு முயற்சி செய்யுங்கள்: பரஸ்பரம் அன்பு மற்றும் நேசத்திறகான முன்மாதிரியாக ஆகிவிடுங்கள். (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 6, பக்கம் 394)

மேலும் நம்பிக்கையாளர்களைக் குறித்து அல்லாஹ் இதனையே கூறியுள்ளான். எனவே சின்னச் சின்ன விஷயங்களில் மோதுவதற்கு பகரமாக நாம் நமது வாழ்வின் நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்யுங்கள். மேலும் ருகூ, ஸுஜூத் மற்றும் இறைவணக்கங்களால் கிடைக்கின்ற, இறை தியானத்தால் கிடைக்கப் பெறுகின்ற அந்த நோக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள். ,

இங்கு வருகை தந்துள்ள ஒவ்வொரு விருந்தினரும் தனது பயணத்தை முற்றிலும் அல்லாஹ்விற்காக மேற்கொள்ளப்பட்ட பயணமாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். ஊழியர்களும் நினைவிற் கொள்ளுங்கள்; விருந்தினர்களும் நினைவிற் கொள்ளுங்கள்; ஜமாஅத்தைச் சாராத சில அந்நியர்களும் இங்கு வருகை தந்துள்ளனர். முஸ்லிம் அல்லாதோரும் வருகை தந்துள்ளனர். ஒவ்வொரு விருந்தினரும், விருந்து உபசரிப்பு செய்பவரும் அனைவரும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் பின்னர் அமைதியான தப்லீஃக் செய்பவர்களாக அவர்கள் இருப்பர். மேலும் பின்னர் இதனால் அந்நியர்கள் மீது மிகவும் நல்ல தாக்கம் ஏற்படுகின்றது. மேலும் பின்னர் அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் தோன்றுகின்றது. மேலும் இஸ்லாமியப் போதனைகளின் சிறப்புகளால் அவர்களும் தாக்கத்திற்குள்ளாகின்றனர்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இங்கு வரக் கூடியவர்கள் ஒருவர் மற்றவருக்கு ஸலாம் கூறுவதை நடைமுறைப்படுத்துங்கள். இதன் பக்கமும் அதிக அதிகமாக முயற்சி செய்யுங்கள். இது நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மிகவும் அருளுக்குரிய மற்றும் தூய்மையான துஆ ஆகும். விருந்து உபசரிப்பு செய்பவர்களும், விருந்தாளிகளும் ஒருவர் மற்றவருக்கு ஸலாம் கூறும்போது, பின்னர் எங்கு எல்லா வகையான அச்சமும், கவலையிலிருந்து விலகியவர்களாக இருப்பார்களோ அங்கு அப்படிப்பட்ட ஒரு துஆ ஒருவர் மற்றவருக்கு பயனளிக்கக் கூடிய துஆவை செய்யக் கூடியவர்களாக அவர்கள் இருப்பர்.

எனவே அல்லாஹ் நமக்கு கற்றுத் தந்துள்ள இந்த தூய மற்றும் அருளுக்குரிய துஆவின் பக்கம் இந்த நாட்களில் மிகவும் கவனம் செலுத்துங்கள். ஏனெனில் இதன் மூலம் நாம் எல்லாப் பக்கமும் அமைதியையும், நேசத்தையும், அன்பையும் பரப்பக் கூடியவர்களாக ஆகிவிடுவோம். மேலும், இந்த சூழலும் முற்றிலும் அல்லாஹ்விற்காக அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான சூழலாக ஆகிவிடும். மேலும் எல்லா வகையான மனயிச்சையின் நோக்கங்களிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் ; மேலும் இந்த நாட்களில் நமது வாழ்வில் ஒரு புரட்சியை உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமக்கு ஒவ்வொரு விவகாரத்திலும் இறைத் தூதர் (ஸல்)அவர்களின் ஸஹாபிகளின் முன்மாதிரி இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் காரணமாக திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையின்படியும் அமல் செய்வதற்கு ஸஹாபிகள் முயற்சி செய்து வந்தனர். உதாரணமாக, ஒரு விருந்தினர் ஒருவருடைய வீட்டிற்கு செல்லும்போது, சென்று விடுங்கள் என்று அந்த வீட்டினர் கூறினால் பின்னர் சென்று விட வேண்டும் என்பது திருக்குர்ஆனின் கட்டளையாகும். தற்போது நான் பணியில் இருக்கின்றேன் என்று கூறப்பட்டால் பின்னர் மகிழ்ச்சியுடன் அவர் திரும்பி சென்று விட வேண்டும். மேலும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு ஸஹாபி கூறுகின்றார்கள்: நான் அல்லாஹ்வின் கட்டளையின் படியும் அமல் செய்யக் கூடியவனாக ஆகிவிட வேண்டும் என்று நான் முயற்சி செய்து வந்தேன். எனவே எவருடைய வீட்டிற்காவது நான் செல்ல வேண்டும்; மேலும் நீங்கள்

Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

**AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE**

**AO MULTI COLOUR PLAN XEROX**



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 12 SEPTEMBER 2024 Issue No.37

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

திரும்பி செல்ல வேண்டும் என்று அந்த வீட்டினர் கூற வேண்டும். தற்போது எனக்கு நேரமில்லை என்று கூற வேண்டும். மேலும் நான் மகிழ்ச்சியுடன் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அங்கிருந்து திரும்பி வந்து விட வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவனாக ஆகிவிட வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் முயற்சி செய்தபோதிலும் எவரும் என்னை வீட்டிலிருந்து திருப்பி அனுப்பியதற்கான சந்தர்ப்பம் ஒருபோதும் எனக்கு ஏற்படவில்லை. இதுதான் ஸஹாபிகளின் முன்மாதிரியாக இருந்தது.(தஃப்ஸீர் துர்ரே மன்ஸூர், தொகுதி 5, பக்கம் 116, ஸியாஉல் குர்ஆன் பப்ளிகேஷன்ஸ் லாஹூர், 2006-ம் ஆண்டு)

எனவே இந்த உயர் நல்லொழுக்கங்களே அந்த விருந்து உபசரிப்பவர்களின் நல்லொழுக்கங்களாக இருந்தன. மேலும் ஒருவருடைய வீட்டிற்கு விருந்தாளியாக செல்லும் விருந்தினரின் நல்லொழுக்கங்களாகவும் இதுவே இருந்தன. எனவே இந்த பரந்த மனப்பான்மை இருக்க வேண்டும். மனிதனிடம் இந்த பரந்த மனப்பான்மை இருக்கும்போது, பின்னர் சின்னஞ்சிறு விஷயங்களை மனிதன் புறந்தள்ளி விடுகின்றான்.

நான் ஒருவர் மற்றவருக்கு ஸலாம் கூறுவது தொடர்பாக கூறினேன். இது தொடர்பாக மற்றொரு விஷயம் இருக்கின்றது. அதனையும் நினைவிற் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸலாமை பரப்புவதற்காக நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால், நீங்கள் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ஸலாம் கூறுங்கள். ( ஸஹீஹ் புகாரீ, கிதாபுல் ஈமான், பாப் (அஃப்ஷா) அஸ்ஸலாம் மினல் இஸ்லாம், ஹதீஸ் - 28)

ஸலாத்தைப் பரப்புவதற்காக எந்த அளவிற்கு நீங்கள் செல்ல வேண்டும் என்றால், நீங்கள் ஒருவரை அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் நீங்கள் அவருக்கு ஸலாம் கூறுங்கள்.

எனவே இந்த ஸலாம் கூறுவதற்கான நடைமுறை அமல்படுத்தப்படும் போது பின்னர் ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்கள் மற்றும் புதிதாக பைஅத் செய்தவர்களின் உள்ளங்களில் ஒரு நல்ல தாக்கம் ஏற்படும். மேலும் இந்த தூய சூழலில் இருந்து அதிக அதிகமாக பயன் பெறக் கூடியவர்களாகவும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளை புகழக் கூடியவர்களாகவும் அவர்கள் ஆகிவிடுவர். மேலும் அதன்படி அமல் செய்யக் கூடிய புதிய அஹ்மதிகள் இன்னும் அழகிய வடிவில் ஜமாஅத் அமைப்பில் ஈர்ப்பு கொண்டவர்களாக ஆகிவிடுவர். சில இடங்களில் நாங்கள் கவனிக்கப்படுவதில்லை என்ற முறையீடு அவர்களுக்கு இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை முன்வைக்கின்றேன். ஜங்கே முகத்தஸ் என்ற (முனாஸிரா) நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையில் விவாதமாக இருந்தது. இதற்கிடையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எங்கு தங்கியிருந்தார்களோ அங்கு ஒரு முறை அன்னாருடன் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஊழியர்கள் கூறுகின்றனர்: ஒரு நாள் விருந்தினர்களின் மிகுதியின் காரணமாக ஏற்பாட்டாளர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உணவு எடுத்து வைப்பதற்கு மறந்து விட்டனர் அல்லது உணவு பரிமாறுவதற்கு மறந்து விட்டனர். மேலும் இரவின் ஒரு பகுதியும் கழிந்து விட்டது. அன்னாருக்கு உணவு வழங்கப்படவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நீண்ட நேரம் காத்திருப்பிற்கு பிறகு உணவு தொடர்பாக கேட்டார்கள். அப்போது ஏற்பாட்டாளர்களாக இருந்த அனைவரும் மிகவும் பதற்றமடைந்து விட்டனர். மேலும் இது என்ன இப்படி ஆகிவிட்டதே! என்று எண்ணி எவருக்கும் கை, கால் ஓடவில்லை. உணவு எடுத்து வைக்கப்படவில்லை. கடைவீதியும் அப்போது மூடப்பட்டு விட்டது. நீண்ட நேரம் ஆகியிருந்தது. எனவே கடைவீதியில் இருந்து வாங்கி வரமுடியவில்லை. எவ்வாறு இருப்பினும், இந்த நிலவரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவனத்திற்கு சென்றது. அன்னார் இதனை அறிந்தபோது, இவ்வாறு பதற்றமடைவதற்கும், வேதனைப்படுவதற்கும் என்ன அவசியம் வந்து விட்டது?; விருந்தினர்கள் உணவு உட்கொண்ட உணவு மேஜைக்கு சென்று பாருங்கள்; அங்கு சிறிது வேகாத எஞ்சிய ரொட்டித் துண்டுகள் கிடக்கும்; அதுவே எனக்கு போதுமானதாகும். அதனை எடுத்து வாருங்கள் என்று அன்னார் (அலை) கூறினார்கள். உணவு மேஜையை சென்று பார்த்த போது, அங்கு சில ரொட்டித் துண்டுகளைத் தவிர்த்து வேறு ஒன்றுமே இருக்கவில்லை. குழம்பு போன்ற எதுவும் இருக்கவில்லை. அன்னார் (அலை) கூறினார்கள்: எமக்கு இதுவே போதுமானதாகும். மேலும் அன்னார் (அலை) அதனையே உண்டார்கள். (ஹஸ்ரத் யஃகூப் அலி இர்ஃபானி ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 322)

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எல்லாரையும் விட அதிகமாக நேசிக்கக் கூடியவராகவும், அன்னாரின் சுன்னத்தின் படி அமல் செய்யக் கூடியவராகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இருந்தார்கள். இது அன்னாருடைய முன்மாதிரியாக இருந்தது. எனவே அன்னாருடைய ஜமாஅத்தில் இணைந்ததாக வாதம் செய்யக் கூடிய நாமும் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடனும், நன்றியுணர்வுடன் இந்த உணர்வை எப்போதும் வெளிப்படுவதற்கு அவசியம் இருக்கின்றது. இந்த மூன்று நாட்களில் ஒருவருடைய விருந்து உபசரிப்பில் ஏதேனும் குறை ஏற்பட்டு விட்டால் பின்னர் அதனை மன்னித்து விடுங்கள்; மேலும் நிர்வாகத்தின் மீது அதிக குற்றம் சுமத்தாதீர்கள்.

மிகச் சிறந்த ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்பதே நிர்வாகத்தின் முயற்சியாக இருக்கின்றது. ஆனால், விருந்தினர்களின் தரப்பிலிருந்தும் எவ்வகையான அதிருப்தியும், முறையீடும் இருத்தல் கூடாது.

நல்லெண்ணத்துடன் சீர்திருத்தத்திற்காக கவனமூட்ட வேண்டும் என்றால் மேலும் என்ன ஆலோசனையை வழங்க விரும்புகின்றீர்களோ அதனை பின்னர் அனுப்பி வைக்கலாம். ஏனெனில், எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்பாடுகளில் சிறப்பை உருவாக்கவும், புதிதாக வரக் கூடியவர்களுக்காக வசதிவாய்ப்புகளை எளிதை ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியும்.

இதுமட்டுமின்றி நான் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது இந்த நாட்களில் பல்வேறு வகையான கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஐரோப்பிய சுற்றுப்பயணம் மற்றும் யூ.கே சுற்றுப்பயணத்தின் நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதனையொட்டி யூ.கே ஜமாஅத்தின் தலைமையக ஆர்கையூஸூடன் இணைந்து ஒரு கண்காட்சி நடத்தப்படுகின்றது.

இதன் தொடர்ச்சி. 9-ம் பக்கம் ......

**National Watch Company**
**Sales & Service**


**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad